1288

ஏப்ரல் 1935. மலர் 12—இதழ் 4.

வருஷ சந்தா ரூ 1-8-0

# ஜெகன்மோகினி

ஆசிரியை
வை. மு. கோதைநாயகி அம்மாள்.

12 DEC 1935

## பொங்கிய காதல் ::

அல்லது **மங்களபாரதி**

துப்பறியும் நாவல்.

அதிகாரம்

12. கலையாத உறுதியே நிலை பெற்ற செல்வம்
13. அலைந்திடும் இதயம்—கலக்கிடும் செய்தி
14. சிறகொடிந்த பறவைகள்—மருமகன் பிரஸன்னம்.
15. சிறைச்சாலையின் வைபவம்—நிரபராதிகளின் பரிபவம்

---

வெளிவந்துவிட்டது

புதிய துப்பறியும் நாவல்

பட்டமோ பட்டம் ::

...ல்லது காலத்தின் கோலம்

JL
ணவ211,N22J1n
N135·12·4.
182975

...ாகினி" ஆபீஸ்
...டித் தெரு,
...கேணி சென்னை

அ 2 அ

வெளிவந்துவிட்டது

புதிய துப்பறியும் நாவல்

# பட்டமோ பட்டம்

அல்லது

# காலத்தின் கோலம்

## வேலையில்லாத் திண்டாட்டத்தின் அலங்கோலம்

---

## உள்ளுறை.

அதிகாரம் — பக்கம்

1. கோடிது! கோடிது! குடும்பத்தொல்லை. 1
2. வறுமைப் பேயின் திருவிளையாடல் 30
3. ஆசையின் மடமை—நாசத்தின் கொடுமை 52
4. பணியாளின் அன்பு—குணம் பெற்ற தெம்பு 79
5. பொறுமைக் குணமே பெருமை யளிக்கும் 105
6. கள்ள யோசனை துள்ளிக் கவிழ்ந்தது 121
7. வருடக் கொண்டாட்டம்—பெருமிதக் களியாட்டம் 135

படித்தும் வேலையகப்படாது திரிவதால் குடும்பங்களுக்கு ஏற்படும் கஷ்ட, நஷ்டங்களும், துர்ச்சகவாசஞ் செய்ய நேர்வதன் பயனாகக் கொலை, களவு, விபசாரம் முதலியனவும் செய்யத் துணிவதும், அவற்றால் அடையும் பலனும் நேரில் நடப்பது போன்று விஸ்தரிக்கப்பட்டுள்ளன. வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கப் புதுவிதமாகச் சங்கம் ஸ்தாபித்து ஒழுங்காக நடைபெற்று, எல்லோரும் நல்ல வழியிலிருப்பதுடன், பல குடும்பங்களிலுள்ள சூழல்களைக் களைந்து அவற்றைச் சீர்படுத்தும் விதத்தைப் படிக்க வெகு ஸ்வாரஸ்யமாயிருக்கும். எங்கும் நம் கண் முன் படும் இவ்விஷயத்தைப் பற்றிச் சுருக்கமாகவும் உருக்கமாகவும் எழுதியுள்ளது இதுவே முதல் நாவலாகும். இதில் பல திடுக்கிடும் சம்பவங்களும், துப்பறியும் சாமர்த்தியமும், ரஸமான சம்பாஷணைகளும், சிறந்த படிப்பினைகளும் நிறைந்திருக்கின்றன.

விலை அணா **10**. சந்தா நேயர்களுக்கு அணா **8**.

ஸ்டாம்பாகவோ இந்தியன் போஸ்டல் ஆர்டராகவோ அனுப்பலாம்.

---

## ஏஜண்டுகள் தேவை.

நமது சஞ்சிகையையும் நாவல்களையும் விற்பதற்கு ஒவ்வொரு ஊரிலும் ஏஜண்டுகளை நியமிக்கப் போவதால் இஷ்டமுள்ளவர்கள் உடனே எழுதவும்.

## 12-வது அதிகாரம்

## கலையாத உறுதியே நிலை பெற்ற செல்வம்

உலகத்தில் குற்றங் கண்டு பிடிப்பதும், குறைகள் கூறுவதும், கோள் சொல்லிக் குடி கெடுப்பதும், பிறருக்கு உதவி செய்யாவிடினும் பல விதத்திலும் உபத்திரவம் செய்து வீண் வம்பு பேசி மனத்தை வேக வைப்பதும், கலகத்தைச் செய்து கலங்க வைப்பதுமே பெரும்பான்மையான மக்களிடையில் பரவி பெரிய வியாதி போலப் பீடித்து ஆட்டும் இக்கலியில், நமது வாலிபச் சிங்கம் நிஷ்களங்கமான ஹ்ருதயத்துடன்—பரிசுத்தமான உபகார நோக்கத்துடன்—உதார குணத்துடன் செய்த உதவியைக் கண்ட அறிவிலி மக்கள் ஆதரவளிப்பது என்பது சாத்தியமா?

அவனுடைய மனம் இச் சுடுசரங்களால்—தன் தாயிக்குச் சமமாக வளர்த்த பாட்டியாரின் பாணம் போன்ற சொற்களால்—எப்படித் தவித்திருக்கும். ஆவேசங் கொண்டவனைப்போல ஓடினான். காமு இருந்த இடம் காலியாயிருப்பதோடு, சாணி கரைத்துக் கொட்டியுள்ள அடையாளத்தையும் பார்த்த மாத்திரத்தில் அவன் உயிரே துடித்தது. மனம் தாமரை இலை நீர்த் துளி போன்று தத்தளித்தது. சுற்று முற்றும் பார்த்தான். எங்கும் ஒருவிதமான சந்தடியுமே தெரியவில்லை.

182975

ராஜசேகரனின் பாட்டியார் அவனை விடாது துரத்திச் சென்று "அடே ராஜா! இந்த சமயத்தில் நீ இவ்விதமான முரட்டுப் பிடிவாதம் செய்வது அழகாயில்லை. உன்னை தந்தைக்குத் தந்தையாக வளர்த்த பாட்டனின் பிணத்தை நாற அடித்து ஊர் சிரிக்கச் செய்யப் போகிறாயா! உன்னுடைய அபாரமான படிப்பினால் மூளையே கலங்கி தாறுமாறாக நடக்கத் தலைப்பட்டதுதான் புத்திசாலித் தன்

மையின் போக்கா! அடேய்! என்ன பார்க்கிருய்! உம். வா!...என்று தன் விசனத்தையும் பாராது அழைத்தாள்.

இதைக் கேட்ட ராஜன் அடங்காத கோபமும் ஆத்திரமும் அடைந்து "பாட்டி! நீ சொல்லும் வேதாந்தங்கள் இம்மட்டோடு போதும். என்னுடைய மனம் தற்போது எந்த நிலைமையில் இருக்கிறது என்பதைக் கூற முடியாது. கடவுள் பிறருக்கு உபகாரம் செய்து உதவும்படி மக்களுக்கு அறிவைக் கொடுத்திருக்கிருரே யன்றி உதவி புரிந்தவர்களுக்குக் கெடுதி செய்யவும் ஏதோ செய்யத் தகாத கொலையைச் செய்துவிட்டவனைப் போல எண்ணிப் பிராயச் சித்தம் செய்யும்படி உபதேசம் செய்யவும் அவர் கூறவில்லை. இந்த அக்ரமத்தை நான் ஒருபோதும் சகிக்கமாட்டேன். அனியாயம்! சுத்த அனியாயம். இப்பேர்ப்பட்ட படாப் பழியும், பாபச் செய்கையும் புரியும் நீங்களா உயர்ந்த குலத்தவர்கள். நீங்களா மகா மேன்மை பொருந்தியவர்கள். இது சுத்த மவுட்டீகத்தனமாகவும் மமதையுடனும் பேசுகிற பேச்சு...தாதா என்னை வளர்த்ததையோ, ஆயிரம் பாடு பட்டதையோ, தன் மகன் போலப் பாதுகாத்ததையோ, நான் இல்லை என்று சொல்லவில்லை. அதற்காக ஓர் அக்கிரமத்தைச் செய்ததாக பழியைச் சுமக்கவும், அதன்படி நடக்கவும் நான் தயாராக இல்லை.

என்று அவன் கூறி முடிக்கு முன் அவன் பாட்டியார் அபரிமிதமான ஆத்திரமும் கோபமுமடைந்து "அடே பாவி! ஐயையோ! என்னுடைய இந்த நிலைமையிலா என்னை இன்னும் அழவைக்கிருய்? இதென்ன விபரீத புத்தியடா! இதற்குத்தான நான் உன்னை அரும்பாடு பட்டு வளர்த்தேன். இப்போது நாங்கள் சொல்வதை நீ கேட்கப் போகிருயா இல்லையா!...என்ன சொல்கிருய்?'' என்று கூச்சலிட்டுக் கத்தி, வாயிலும் வயிற்றிலும் தலையிலும் அடித்துக்கொண்டு பெரும் ஆகாத்யம் செய்து ராஜனின் கையை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு "அடேய்! திமிருதே; என் மானம் போகிறது. ஊர் சிரிக்கிறது. என் ப்ராணனை வாங்காதே. இம்மட்டுடன் தேறிவிடு. பெரியார் என்ன சொல்லுகிருர்களோ அதைக் கேளு.'' என்று மீண்டும் மிரட்டி உருட்டிக் கூறினாள்.

இதைக் கேட்ட ராஜனின் கோபமும், தன் மக்களிடத்தில் வெறுப்பும் அதிகரித்து விட்டன. இன்னும் அருகிலுள்ளோரும், மாமனும் மாமியும் இதையொட்டியே தாறுமாறாகப் பேசி "தறிதலை மகன், சொன்ன பேச்சு கேட்காத சோதாவாகிவிட்டான். படித்து விட்ட கர்வம். பந்தாட்டத் திமிர்...அந்த குழந்தையின் முக ஜாடை அசல் இவனையே உரித்துக்கொண்டு வந்திருப்பது போல இவன் பவிஷை எடுத்துக் காட்டிவிட்டது; இன்னும் தள்ளுகிறான். இவ் வீட்டில் யார் இனி கையை நனைப்பார்கள். இத்தனை மண்டை கொழுப்பா இவனுக்கு. இத்தனை நன்றிகெட்டத்தனமா இவனுக்கு" என்று சரமாரியாக வசைமாரி பொழிகிறார்கள்.

இவை ராஜனின் ஆத்திரத்தை இன்னும் ஆயிரம் பங்கு கிளறி விட்டன. கண்களோ தீப் பொறியைக் கக்குகின்றன. அவன் வெகு துணிகரமாக பேசத் தொடங்கி "பாட்டீ! இந்த அக்கிரம வார்த்தை களைக் கேட்க என்னிதயம் பிளந்துவிடும் போல விருக்கிறது. உண் மையில் கடவுள்மீது ஆணையாக நான் அந்தப் பெண்ணை முன் பின் கண்டதில்லை. அவளுக்கும் எனக்கும் எத்தகைய சம்பந்தமும் கிடை யாது. இது முக்காலும் சத்தியம். கடவுளையும், அவர்மீது ஆணை செய்வதையும் நம்பாத உங்களுக்கு இந்த கட்டுப்பாடும், அனுவசிய மான பேச்சும் பேசுவதற்கு என்ன தகுதி இருக்கிறது? சாஸ்திரம், சட்டம், வழக்கம் பழக்கம் என்பதெல்லாம் கடவுள் ஒருவர் அறிய உண்டாகிச் செய்வதேயன்றி வாய்ப்பிதற்றலாகச் சொல்லும் வார்த்தையா! அப்படி கடவுளுக்குப் பொதுவாக நடக்கவேண்டும் என்கிற கருத்துள்ளவர்களுக்கு நான் கடவுள்மீது செய்யும் ஆணையை நம்பவேண்டாமா.................

என்று முடிப்பதற்குள் பாட்டி ஆவேசத்துடன் "அட அனி யாயக்காரனே! திருடினவனுக்குத் தெய்வமேது. கொலைப்பாதகனுக்கு கடவுளும் சத்தியமும் ஏது? அவன் அக்கிரமங்களைச் செய்துவிட்டு இல்லை என்று கடவுள்மீது சத்தியம் செய்தும், ஆணை வைத்தும் நெஞ்சு துணிபாகச் செய்துவிடுவது அவன் இயல்பாயிற்றே! அத் தகையோனின் சத்தியத்திற்கு மதிப்பு ஏதடா! உண்மையான சத்தி யத்தையும் கடவுளையும் யாரடா மதிக்கமாட்டார்கள்...சீச்சீ! துர்ப்

புத்திக் கழுதையே! வளர்த்த கடா மார்பில் பாய்வது என்ற பழமொழி எனக்கே உரித்தாகிவிட்டது.

ஐயோ! கிளிபோன்ற என் மகள் வயிற்றில் இத்தகைய உதவாக் கரை சனியனு வந்து பிறந்தது! இப்படி என் மானத்தை வாங்கி மனத்தை நோகச் செய்து ஊர் சிரிக்கும்படியாக விருப்பதற்கா உன்னை நான் அரும் பாடு பட்டு வளர்த்தேன். அன்றே—உன் தாய் இறந்த அன்றே—உன்னேயும் உன் அப்பன் தொலேத்துக் கொண்டுபோயிருக்கலாகாதா? அன்றி உன் தாயோடு நீயும் மறைந்திருந்தால் என் வயிற்றெரிச்சல் அன்ருேடு துலேந்துபோயிருக்குமே! உன்னே எத்தனேயோ கஷ்டப்பட்டு வளர்த்தது இதற்குத்தான பலனுயிற்று. ஐயோ! பிணம் நாறிப்போகிறதே! அவர் இருந்த இருப்பென்ன! அவர் காலம் நடந்த கண்ணியமென்ன! அவருடைய பிணமா இப்படி இருப்பது? ஐயையோ! என்னுல் இனி சகிக்க முடியாது. நீ சொல்வதைக் கேட்டு நடக்கப்போகிருயா என்ன?'' என்று அதட்டினுள்.

நமது இளவல் தன் பாட்டியை நோக்கி "பாட்டி! இனி என்னுல் தாங்க முடியாது. குற்றமற்ற நிரபராதியான என்னே மகத்தான பெரிய குற்றத்தைச் செய்துவிட்டதாக ஊரோடு ஒருங்கே தீர்மானித்து முடிவு கட்டி இத்தனே தூரம் ஜோடித்து கட்டும், திட்டமும் போட்டு விட்ட பிறகு பிராயச்சித்தம் என்கிற ஓர் பொம்மை விளேயாட்டைச் செய்துவிட்டால் மட்டும் நான் பரிசுத்தவானுக—சத்தியவானுக—குற்றமற்றவனுக ஆய்விடுவேனு? என்னுடைய மன அழுக்கும் அக்கிரமமும் போய்விடுமா! அப்போது மட்டும் நான் செய்த பெரும் பாதகம் தீர்ந்துவிடுமா? அந்தோ! பரிதாபம்! பரிதாபம்! மக்களிடையே இத்தகைய மூடக் கொள்கையும் சந்தேகமும் வீண் வம்பினுல் ஜோடிக்கும் ஜோடனேயும் ஒன்று கூடி எத்தனே நிரபராதிகளின் மனத்தைத் துடிக்கச் செய்கின்றதோ! எத்தனே குடும்பங்களே அழிக்கின்றதோ! சீச்சீ! வெட்கம்; வெட்கம்!

பாட்டி! நான் அனுவசியமாக வாதாடப் பிரியப்படவில்லே. என்னுடைய பரிசுத்தத்தை அந்த சர்வலோக ரக்ஷகன் அறிந்தால்

போதும். அப்படி நான் குற்றம் செய்தவனுனல் எனக்குத் தக்க ப்ராயச்சித்தத்தை அந்த மூலகர்த்தன் செய்து வைக்கத் தயாராக இருக்கிறுன். ஆதலால் நான் ஒரு போதும் இதற்குச் சம்மதிக்க மாட்டேன். என்னுடைய மனம் இதற்கு என்னுயிருள்ள மட்டும் இசையாது.

பாட்டி! ஒரே வார்த்தையில் முடிக்கிறேன். என் தாயார் இறந்த அன்றே நானும் இறந்திருந்தால் நிம்மதியாக இருக்குமே என்று நீ சற்று முன்னர் தெரிவித்ததை நான் மறக்கவில்லை. நானும் இப்போது என் பாட்டனருடன் இறந்துவிட்டதாகத் தீர்மானம் செய்து விடுங்கள். இது தான் எனது முடிவான வார்த்தை. என்ஞல் அவமானமும் வேண்டாம்; ஜாதிக்கட்டுப் பாடும் வேண்டாம். உங்கள் கவுரவம் குலையவும் வேண்டாம். என்னுடைய சம்பந்தமும் தாதாவுடன் விட்டு விட்டதாக இன்றே தலை முழுகி விடுங்கள். என்னை இதுகாறும் வளர்த்ததற்கு நான் என் மனமார்ந்த நன்றியை எந்த ஜென்மத்திலும் செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். இது தான் என் கடைசி முடிவான வார்த்தை. நான் இருந்தாலல்லவோ உங்களுக்கு மன வருத்தம். இதோ செல்கிறேன்; இனி கவலை வேண்டாம்'' என்று பிடிவாதமாகவும் அழுத்தந் திருத்தமாயும் கூறி விட்டு பாட்டனரைச் சுற்றி நமஸ்கரித்து விட்டு அவ்விடத்தில் நிற்காமலும், பதிலை எதிர் பார்க்காமலும் திரும்பிப் பார்க்காமலும் ஓரே ஓட்டம் பிடித்தான்.

இதைக் கண்ட எல்லோரும் ஆச்சரியப்படுகிறவர்களும், இப்படியும் துடுக்கு இருக்குமா என்று திட்டுகிறவர்களும், செய்வதையும் செய்துவிட்டுத் தன் பொருட்டு ஆயிரம் பாடு பட்ட பாட்டனின் பிணம் கிடக்கையில் என்ன நெஞ்சழுத்தத்துடன் ஓடிஞன் பாரு என்று கூறியவர்களுமாகப் பலவிதமான குரல்கள் உண்டாகி விட்டன.

கிழவிக்கு இன்னது செய்வதென்றே தெரியவில்லை. வீதியில் செல்லவோ ஓடவோ கூடாத நிலைமையில் தத்தளிக்கின்றுள். தன் மகனை நோக்கி "அடேய்! பையனை அழைத்துக் கொண்டு வாடா!

இளங்காளே பயமறியாது என்பது போல் ஓடுகிருன். கூப்பிடடா! “ஐயோ! அவன் மகா ரோஷக்காரனுயிற்றே! எங்கு ப்ராணனை விட்டு விடுவானே! என்ன செய்வானே தெரியவில்லையே! சற்று போடா” என்று வளர்த்த பாசத்தால்—வாஞ்சையால்—கத்துகிருள்.

தாயின் கதறலைக் கேட்ட மகன் “போம்மா! அவன் வர வர சோதா ராஸ்கலாக இருக்கிருன். அத்தனை மண்டைத் திமிர் என்ன அவனுக்கு. போனல் போகிருன். பேசாதிரு. நாயைப் போல அலைந்து விட்டுத்தானே கழுதைபோல வருகிருன். அவனை இன்னும் அழைக்க வேண்டுமா? அவன் சாகவும் மாட்டான், போகவும் மாட்டான். காரியம் நடப்பதைப் பாரு. அவன் செய்த அவமான காரியத்திற்கு அவனைச் சமாதானமும் கூறி அழைக்க வேண்டுமா!” என்று போடு போட்டு விட்டான். அவன் மனைவியும் கூட ஒத்து பாடித் தாளம் போட்டாள். இதற்கு அனுகூலமானவர்களும் சேர்ந்து கொப்பி தட்டினர்கள்.

தனிப்பட்ட ஒண்டிக் கிழவி என்ன செய்வாள் பாவம். ஆத்திரத்தில் ஏதோ சொல்லி விட்டாள். மலை போல ஒரு கிழப் பிணம் கிடப்பது ஒரு வயிற்றெரிச்சல்; இச்சமயத்தில் அவனையும் இவ்விதம் செய்து விட்டோமே என்ற விசனம் அதிகரித்து விட்டது. என்ன செய்ய முடியும்? எல்லா விசனத்தையும் சேர்த்து முட்டிக் கொண்டாள். கத்தினள்; கதறினள். இதற்கு மேல் நடந்த சடங்குகளை விவரிக்க வேண்டுமா!

ஜாதிக் கட்டுப் பாடெல்லாம் இப்போது எங்கேயோ பறந்து விட்டது. பழுத்த வைதீகப் பழ மெல்லாம் வந்து விட்டார்கள். ராஜனும் காமுவும் இரண்டு நாட்கள் வீட்டிலிருந்ததற்காக வீட்டுக் கம்பத்திற்கு முதல்—எருமைக்கிடாவுக்கும் எலிக் குஞ்சு, பெருச்சாளியுள்பட—சகலத்திற்கும் ஏதோ மந்திர தந்திரத்துடன் (ப்ரதான தக்ஷிணை ரூபாய் பேசுகிறது) ப்ராயச்சித்தம் நடந்து, பிறகு சவம் அடக்கமாயிற்று.

ராஜன் வார்த்தையில் நம்பிக்கை வைத்தவர்களும், அவனிடம்

மதிப்புள்ளவர்களும் இக் காரியத்தை வெறுத்தார்கள். "இதென்ன அக்ரமம். இப்படியும் செய்வது உண்டா! ப்ராயச்சித்தமாவது மண்ணாங் கட்டியாவது? மூலைக்கு மூலை பணத்தையும் அரிசி, வெல்லம், பழம், தேங்காய் முதலிய பல திரவ்யங்களையும் வைத்து ஏதோ மந்திரம் சொல்லி விட்டதனாலேயே இப்போது என்ன உயர்ந்து விட்டது. அட அக்ரமமே! அனியாயச் செலவும் விரயமும் உண்டாகியதல்லவா மிஞ்சியது!" என்று வருத்தப் பட்டார்கள். ராஜன் ப்ராயச்சித்தத்திற்கு மறுத்துச் சென்றது மிகவும் கெட்டிக்காரத்தனமாயிற்று. அவன் படித்த புத்திசாலியல்லவா என்றும் போற்றினார்கள் சிலர். நன்மைக்கும் தீமைக்கும் இகழ்ச்சியும் புகழ்ச்சியும் கூறுவதற்கு எத்தனையோ பெயர்கள் வந்து விடுவது சகஜமல்லவா? இவ்விடத்தில் கேட்க வேண்டுமா!

தாங்கவியலாத துயரத்துடன் ஓடிய ராஜனின் இருதயம் தத்தளிக்கின்றது; துடிக்கின்றது. அந்த கட்டுப்பாடான கிராமத்தில் மிகவும் மெலிந்து நொந்து நோயால் பீடிக்கப்பட்டுள்ள காமு இச் சிறிய சிசுவையும் தூக்கிக் கொண்டு அனாதைப் பரதேசி போல எங்கு சென்றிருப்பாள். ஐயோ! பேதையின் மனம் எப்படித் தான் துடித்திருக்கும். என்ன நினைத்தாளோ! என்ன விதமாகத் தத்தளித்துச் சென்றாளோ! சீச்சி!......சமூகமாம்......சமூகம்...... அனியாயத்திற்கே நியாயம் என்ற பெயரைச் சூட்டி மக்களை வருத்துவதா சமூகம்!" என்று தனக்குள்ளாகப் பலவித சிந்தனைகளைச் செய்து கொண்டே அவ்வூரிலுள்ள சந்து பொந்துகளிலும் இன்னும் மற்ற இடங்களிலும் தேடிக் கொண்டே சென்றான்.

182975

எங்கு பார்த்தாலும் காமுவைக் காணவில்லை. தன் பாட்டனாருக்கு உடம்பு அதிகமாக இருப்பது முதல் அன்று வரை வெகு நேரம் அவன் கிழவரின் பக்கத்திலேயே இருந்து விட்டதால் காமுவை அடிக்கடி அதிகமாகக் கவனிக்க முடியாது போய் விட்டது. ஆகையினால் அவள் எப்பொழுது இந்த இடத்தை விட்டுச் சென்றாள் என்பதையும் அவனால் அறியக்கூடவில்லை. அவள் எங்கேயோ குளத்திலோ, கிணற்றிலோதான் தன்னுயிரை மாய்த்துக் கொண்டிருக்க வேண்டும். அவள் மகா மானி என்று தெரிகிறது. ஆதலால்

அவள் இனி நம் கண்ணில் படுவாளா?'' என்று வெகு வெகு யோசனையும் குழப்பமும் உண்டாகி விட்டன.

அவனுடைய மனோ வேதனை பலவிதத்திலும் பாதித்ததானாலும் தன் பாட்டனாரின் சவத்தின் க்ரியைகளுக்குத் தான் கூட விருக்க முடியாது, இம் மூட ஜனங்கள் செய்து விட்டார்களே என்கிற துக்கம் அவனை அப்படியே வதைத்து விழுங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு பாபமுமறியாத தன்னைப் பழித்து, இழித்துக் கூறிய சொற்களின் பாணங்கள் ஒரு புறம் துளைக்கின்றன.

பலவகைப்பட்ட துயரங்களுடன் மனந்தவித்தவாறு வெகு தூரத்திலுள்ள ஓர் மரத்தடியில் உட்கார்ந்து விட்டான். தன் பாட்டனாரின் சவம் ஆடம்பரமாகச் செல்வதைக் கண்டான். சகிக்க முடியாத விசனத்துடன் ஸ்மசானத்திற்கு ஓடினான். ஒருவரது தாக்ஷிண்யத்தையும் பாராமல் பிணத்தின் மேல் விழுந்து கதறினான். கடைசி முறையாகப் பார்த்துப் பார்த்துப் பிரலாபித்தான். இங்கு எல்லோருக்கும் ப்ராயச்சித்தம் நடந்த விஷயத்தையும் அங்கு பேசிக் கொள்பவர்களின் மூலம் அறிந்து மனங் கொதித்து வெதும்பினான். “சீச்சீ! இனி அவ் வீட்டு வழி மிதிக்கக் கூடாது. பட்டினத்துப் பிள்ளையார் ஸ்மசானத்தில் தன் தாயாரைக் கண்டு புலம்பிக் கொள்ளி யிட்டுச் சடங்குகளை முடித்துச் சென்றதைக் கதையில் படித்தோம். தாயிக்குத் தாயாய், தந்தைக்குத் தந்தையாய், குருவுக்கு குருவாக இருந்த என் பாட்டனாரை நான் அம்மாதிரி கடைசியாக தரிசித்து அவரது சவத்தடியில் மன்னிப்பு பெற்றுச் செல்கிறேன்.'' என்று தனக்குள் பிதற்றிக் கொண்டு கதறினான்.

அப்போது அவன் பாட்டி தன் விசனத்தோடு விசனமாக அவனை நோக்கி “அடேய் ராஜா! இம்மட்டோடு உன் கோபம் போதும். வீட்டுக்கு வந்து புண்ணியாவாசனமாவது செய்து கொண்டு நாலு பேரோடு கூடி விடு'' என்று ஆரம்பித்தாள். ராஜன் வயிற்றெரிச்சலுடன் ஒரு விதமாகப் பார்த்தபடியே “பாட்டீ! இனி அப் பேச்சை எடுக்காதே! நான் உயிருடனிருப்பேனேயானால் அந்த அனாதைப் பெண்ணைத் தேடிப் பிடித்து ஆதரவளிக்காமல் ஒரு

போதும் இருக்கமாட்டேன். நான் கொடுத்து வைத்திருந்தால் அந்த பெரும் பாபத்திலிருந்து நீங்கிப் புண்ணியம் பெறுகிறேன். இல்லையேல் என் விதியைப் போலாகட்டும்!'' என்று கூறி விட்டுத் தூர விலகிச் சென்று விட்டான். பாட்டனாரின் தகனக் கிரியை முடிந்ததும் அவ்விடத்திலிருந்து மாயமாக மறைந்து விட்டான்.

எல்லோரும் ஸ்நானம் செய்துச் சென்ற பிறகு இவனும் ஸ்நானம் செய்ய வேண்டி குளத்திற்குச் சென்றான். அப்போது மங்கத்தாயி எல்லாருடைய துணிகளையும் ஒரு மூட்டை கட்டி எடுத்துக்கொண்டு தோய்ப்பதற்காக அங்கு வந்தாள். தூரத்திலிருந்து அவளைக் கண்ட ராஜன் மெல்ல அருகில் வந்து "மங்கத்தாயீ! இப்படி இம் மரத்தடியில் வா; தியங்காதே'' என்று அழைத்தான்.

தானே காலில் போட்டுக் கொண்டும், தோளில் போட்டுக் கொண்டும் சுமந்த ராஜனின் மீது மங்கத்தாயிக்கு அலாதியான விச்வாசமும் பெரும் மதிப்பும் என்றும் உண்டு. ஆதலால் "எஞ்சாமீ! சின்ன ராசா எம்மேலே கோவிச்சிக்க வாணும். ஏதோ பெரியவங்க சொல்றத்தைத் தான் ரவெயுண்டு கேட்டா என்ன சாமீ!'' என்று கூறிக் கொண்டே அவனருகில் வந்தாள்.

ராஜன் :—மங்கத்தாயீ! அந்த வேதாந்த மெல்லாம் கிடக்கட்டும். இப்போது நான் கேட்கிறதற்குச் சரியான, உண்மையான பதில் கூறப் போகிறாயா இல்லையா! நீ என்னிடம் தனித்த வாஞ்சை வைத்திருப்பது உண்மையாயின் உடனே சொல்லி விடு. அந்த அனுதைப் பெண் எங்கே, எப்பொழுது, எப்படிச்சென்றாள்? செல்லும் போது நீ பார்த்தாயா! உன்னிடம் ஏதேனும் சொன்னாளா! வீட்டிலிருப்பவர்கள் அவளை என்ன செய்தார்கள்? சாணி கரைத்து அங்கு கொட்டி இருக்கிறதை நான் பார்த்தேன். நீ இந்த உண்மையை ஒளிக்காமல் சொன்னால் உன்னுடைய மகன் செய்த ஆதி ரகஸியத்தை நான் இன்னும் மூடி வைத்து மறந்திருப்பது போலவே என்று மிருப்பேன். இல்லையேல் கிளறி விட்டு விடுவேன். உம்......தியங்காதே......

மங்கத்தாயி அவன் கூறியதைக் கேட்டுத் திடுக்கிட்டாள். இதே வீட்டில் அவளுடைய மகன் வெள்ளிப் பாத்திரத்தைக் களவாடி விட்டதை ராஜன் கண்டு பிடித்து மங்கத்தாயிடமே கூறி அதை வெளியில் விடாது அமுக்கிய படியே பாத்திரம் எங்கேயோ கெட்டு விட்டதாக ஒத்துப் பாடி விட்டான். களவாடிய மகன் அதை அப்போதே பாழ்படுத்தி விட்டதால் உருப்படியகப்படவில்லை. இந்த விஷயம் மங்கத்தாயிக்கு பெருந்திகிலும் கலக்கமும் இப்போது உண்டாக்கி விட்டது. அவள் ராஜனின் கையைப் பிடித்துக் கொண்டு

"சின்ன் சாமீ! சின்ன தொரே! அத்தே வெளியே விடாதே! இந்த மட்டும் எம் மானத்தைக் காப்பாத்திப்புட்டே. இன்னும் என் உசிர் இருகிக்கர வரிக்கும் காப்பாத்திபுடு ஒன்னே கெஞ்சி கேக்கறேன். என் குடும்பத்துக்கு பொயப்பே போய்டும்.........ராசா! ......அந்த கண்ராவியெ தான் நெனச்சா வயிறு பத்திகிது.

ஒங்க மாமன் பொன்ஜாதி அப்பிடி கூசப் போட்டூட்டுப் போனாளே! பெறவு அந்த பொண்ணு கண்ணுங் கண்ணீருமா இருந்திச்சி. ஒம் பாட்டியும் கன்னுபின்னுன்னு திட்டி ஆட்டம் ஆடினாங்க. இதெல்லாம் அந்த பொண்ணு கேட்டுகிட்டே இருந்தா! ஒங்க மாமன் பொஞ்சாதிக்கு தங்கச்சி—அதான் அந்த முண்டச்சியும்—வந்தா. அக்காகாரியும் கூட சேந்துகிட்டா! ரெண்டு பேரும் வந்து அந்த பொண்ணெ கேக்காத கேழ்வி எல்லாங் கேட்டு காரி காரி அவ மேலே உமிஞ்சு "வெக்கங்கெட்ட கயுதெ! மானங்கெட்ட முண்டெ! பேமானி நாயே...திருட்டு கசுமாலமே......யப்பப்ப......சொல்ல முடியாது.

இப்படி எல்லாந் திட்டினுங்க. சாணியை கரைச்சாந்து அவ தங்கச்சிதான் மொதல்லெ அந்த பொண்ணு மேலெ கொட்டினா. தொடப்பத்தை இன்னேத்தி எடுத்தாந்தா. இதுக்குள்ளற அந்தப் பொண்ணு கொயந்தெ மேலெ தண்ணி பட்டால் மூச்சு தணருமே இண்ணு கொயந்தயெ மடிலெ போட்டுகிணு மூடிகிணு! வாயெ தொறக்கலெ. ஐயோ பாவம். ஒன்னெ எட்டி எட்டிப் பாத்தா, ஒன்னெ காணம். தேம்பித்தேம்பி அயுதா.

எனக்கு துக்கந் தாங்கலெ. நானு ஒங்க மாமன் பொஞ்சாதி கிட்ட சண்டெக்கி போனேன். அந்த மவாராசி கையிலே இருந்த சாணி தண்ணியெ என் தலையிலெ கொட்டி பட்டார் பட்டார்ணு தொடப்பத்தாலெ நானு அடி என்னெவச்சுட்டா! கூட்டிக்கொடுக்கர முண்டெ எண்ணு என்னெ சொன்ன சொல்லு கணக்கில்லே. அதுக் குள்ளற அவளெ யாரோ கூப்பிட்டா! மவராசி பூட்டா!

நான் திரும்பிப் பாக்கச்செ அந்த பொண்ணு விக்கி அயுது கிணே கொயந்தையெ தூக்கிகிணு பொழக்கடெ வாசப்படி தாண்டிப் புட்டா! நானு மனசு கேக்காதே ஓடினேன். அவ ரொம்ப அயுத படியே "ஆயா! மகா பாவி. அனைதைப் பிணமாகிய என்னால் ஒனக் கும் இவ்வீட்டு எஜமானருக்கும் நேர்ந்த கதி என்னையே சித்திர வதை செய்கிறது. இதுக்காக என்னெ நான் செருப்பாலடித்தாலும் தீராது. என் சரீரத்திலுள்ள தோலை செருப்பாகத் தைத்து உன் எஜ மானருக்குப் போட்டாலும் போதாது. ஆயா! என்னாலடைந்த துன்பம் போதும். சண்டாளி எனக்கு உபகாரம் செய்ய வந்தது அவ ருக்கு அபகாரமாகிவிட்டது. வீட்டில் நடந்த சகல விஷயங்களையும் நான் கேட்டுக்கொண்டுதானிருக்கிறேன்...நான் போகிறேன். அவரைக் கவலைப்படவேண்டாம்; இம் மகா கொடும்பாவியை நினைக் கவோ தேடவோ வேண்டாமென்று சொல்லி விடு. ஆயா! உன் எஜ மானரின் பெயர்கூட எனக்குத் தெரியாது. அவருடைய பெயர் என்ன? அதை மட்டும் கூறிவிடு நான் போகிறேன்". என்று மன முருகிக் கேட்டாள்.

சாமி இதுக்குள்ளற திரியும் அந்த பத்திரகாளி வராப்பிலெ கொரல் கேட்டுது. எனக்கும் துக்கம் தாங்கலெ. தொண்டெயெ அடச்சிப்புட்டுது. இன்னும் அவ வந்து என்ன சேஞ்சுபுடுவாளொ இண்ணு பயம் வந்திடுச்சி. இதுக்குள்ள நானு அயுதுகிணெ கக்கூசுக் குள்ளே ஓடி பூட்டேன். அந்த பொண்ணும் பூட்டா பாவம். இதாஞ் சாமி எனக்குத் தெரியும்" என்று அப்போதும் கண்ணீர் ஆறுய்ப் பெருகியவாறு புலம்பிக்கொண்டே கூறினாள்.

இச் செய்தியைக் கேட்டதும் ஏற்கெனவே கொதித்துக் கொண்டிருக்கும் உள்ளத்தினனான ராஜனின் நிலைமை எப்படி இருக்

கும் என்பதை விவரிக்கவேண்டுமா' அந்தோ! இதயம் வெடித்து விடும்போலாய்விட்டது. அதற்குமேல் அவனுல் ஒன்றுமே கேட்கவோ, பேசவோ, நிற்கவோ முடியாது தள்ளாடிவிட்டான். பதில் பேசாது முகத்தில் துணியைப் போட்டு மூடிக்கொண்டு புலம்பிய படியே விற்ற்ற் என்று போய்விட்டான். மங்கத்தாயும் வருத்தப் பட்டுக்கொண்டே தன் வேலையை கவனிக்கச் சென்றுவிட்டாள்.

ராஜன் குளத்தில் ஸ்நானம் செய்து விட்டு ஈரத் துணியுடன் தான் எங்கு செல்வது, என்ன செய்வது என்பதை யறியாது அவ்வூரில் முக்யமான இடத்தில் எல்லாம் அலைந்து திரிந்து சுற்றினன். எங்கு தேடியும் காமுவின் தகவலே தெரியவில்லை. அளப்பரிய துயரத்துடன் ஓய்ந்து விட்டான். அவள் எங்கேயோ விழுந்து தன்னுயிரை மாய்த்துக் கொண்டு விட்டதாக அவன் தீர்மானித்து விட்டான்.

மறு தினமே அவன் நேரே தான் கல்வியின் பொருட்டு வாஸம் செய்யும் பட்டினத்திற்குச் சென்றுவிட்டான். "அனுதைப் பக்ஷி போல நான் விட்டு வந்த அருமைக் காதலி—என்னுருயிர்க் காதலி— பாரதியை சதா எண்ணி வருந்திக்கொண்டிருக்கையில் இந்த அபலை அனுதைப் பெண்ணின் துயரம் என்னை வந்து சூழவேண்டுமா! ஈசா! ஐயோ! தாமரை மலர் போன்ற அழகிய முகம்...சுந்தரமான முகம்—என்ன விதி! விதி! அக் குழந்தையின் முகத்தை மீண்டும் பார்க்காது போய்விட்டேனே!" என்று குழந்தையின் முகத்தை எண்ணி ஏங்கினன்.

துயரம் எல்லை கடந்து போய் விட்டதால் சித்தம் சிதறிப் பித்தன்போலாகிவிட்டான். தனக்கு பாரதியிடமிருந்து ஏதேனும் கடிதம் வந்திருக்கிறதோ வென்று பார்த்தான். ஒன்று மில்லை. "என் கடிதம் எழுதவில்லையோ தெரியவில்லையா! இத்தனை நாளைக்குக் கட்டாயம் பதில் வந்திருக்கு மென்று எண்ணினேனே! நான் போக வில்லை என்கிற கோபத்தினுல் பேசாது இருந்து விட்டாளா!......... ஆம்......அப்படித்தானிருக்கும்." என்று பாரதியின் தகவலின் உண்மை தெரியாது அவ்வகையிலும் குழம்பித் தவித்தான்.

உடனே பாரதிக்கோர் கடித மெழுதி அதைப் பெட்டியில் போட்டு விட்டு அக் கடிதத்திற்கு பதிலே வெகு ஆவலோடு எதிர் பார்த்து வந்தான். காமுவின் விஷயம் கேவலமாயும் ஆபாசமாயும் மோசம் செய்யப்பட்ட ஊழலாயுமிருப்பதால் அவளேத் தேடும் பொருட்டுப் பகிரங்கமாக பத்திரிகையில் பிரசுரிக்க அஞ்சினன். அதனல் அவளுக்கு என்ன ஆபத்து நேருமோ! என்ற அச்சம் உண் டாகியதால் சிவனே என்று இருந்து விட்டான். அதைப் பிறரிடம் வெளியிடவும் இல்லே.

இப்படியே இரண்டு நாட்களாயின. பாரதியின் கடிதத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அவன் ஏங்கி ஏங்கி எதிர் பார்த்துக் கொண்டிருந்ததற்கு நேர்மாருக அவன் அனுப்பிய கடிதமே அவனுக்குத் திரும்பி வந்து பெரும் கலக்கத்தையும் மனக் குழப்பத்தையும் அளித்து விட்டன. "விலாசதார் அங்கு இல்லே" என்று கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது கண்டு திடுக்கிட்டான். "இதென்ன பாரதி அவ் விலாசத்தில் இல்லாமல் எங்கே போயிருக் கக் கூடும்? அவளுக்குப் போவதற்கு எங்கும் இடமே இல்லே என்று கூறியது எனக்கு நன்ருக ஞாபகமிருக்கிறதே! அப்படிக்கிருக்க என் கண்மணி எங்கே போயிருக்கக் கூடும்? இம்மாதிரியான செய்தி வரும் என்று நான் நினேக்க வில்லேயே! ஹா! பாரதி......என்று முன் னிலும் அதிகரித்த மனே வேதனேயுடன் செய்வதறியாது இடிந்து போய் விட்டான்.

## 13-வது அதிகாரம்.

### அலேந்திடும் இதயம்—கலக்கிடும் செய்தி

உலகத்தில் மக்கள் சகல விதத்திலும் தாம் நிச்சயமாக நம்பி எதிர்பார்க்கும் காரியங்கள் கை கூடுவதென்பதும், நினேத்தபடி செய்து திருப்தி யடைவதென்பதும் நூற்றுக் கொருவருக்கே அப்பாக்கியம் கிடைக்

கின்றது. நினைப்பதொன்று, நடப்பதொன்று; எண்ணுவதொன்று செய்வதொன்று; எதிர் பார்ப்பதொன்ற. காரியத்தின் முடிவு ஒன்று. இப்படியாகவே முடிந்து மன மிடிந்து கவலைப் படுவது தான் அதிகமாக விருக்கும். இவ்வுலகத்தில் நமது ராஜனின் காரி யங்கள் மட்டும் எங்ஙனம் சரிவர நினைத்தபடி, எதிர் பார்த்தபடி, கவலை இன்றி நடக்க முடியும்?

தன்னருமைக் காதலியின் கடிதத்தினுல் சற்று களிப்படைய எண்ணியதற்கு நேர்மாருக அதிக கவலை யடைந்து கண்ணீர் பெருக் கவே நேர்ந்து விட்டதை எவ்வாறு சகிப்பான்.

"அடா...! நான் நினைப்ப தெல்லாம், எதிர் பார்ப்பதெல்லாம் இம்மாதிரியாகவா ஆய்விட வேண்டும். இப்போதுள்ள என் மனோ வேதனை சற்று நீங்கி கிஞ்சித்து சாந்தி ஏற்படும் என்று எதிர் பார்த்ததெல்லாம் போய், ஏக்கமும் மனத்தாங்கலும் உண்டாகி விட்டதே! பாரதி அப்படி வெளியில் செல்வதாயின் எனக்குக் கடிதம் எழுதாமல் செல்லமாட்டாளே! ஒன்றும் தெரியவில்லையே!" என்று பின்னும் அதிகரித்த விசனத்துடன் தவித்தான். தான் உடனே வாணீபுரம் சென்று தகவல் தெரிந்து கொண்டு வருவதென்று தீர் மானித்து அன்றே பிரயாணமானுன்.

காலை சுமார் 8 மணிக்கு அவன் வாணீபுரத்தை யடைந்தான். எண்ணுததெல்லாம் எண்ணி மனம் புண்ணுகித் தவித்தவாறே பாரதி யின் வீட்டிற்கு ஆவலே வடிவாகச் சென்ருன். பாரதி குடியிருந்த அறையில் வேறு யாரோ தம்பதிகள் உட்கார்ந்து பேசிக் கொண் டிருப்பதைக் கண்டதும் இவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவர்கள் முற்றிலும் புதிய மனிதர்கள் என்பதும் புதிய குடித்தனக் காரர்கள் என்பதும் அங்கு சாமான்கள் வைத்திருந்ததிலிருந்து விளங்கியது.

முன் பின்னறியாத தான் திடீரென்று அங்கு சென்று நிற்பதைக் கண்டால் அவர்கள் ஏதேனும் வித்யாசமாக நினைத்து விட்டால் என்ன செய்வதென்று பெரிய யோசனை யுண்டாகி விட்டது. உடனே அவன் தியங்கியபடியே முன் வைத்த காலைப் பின் வைத்துக்

கொண்டு வாசலில் வந்து நின்றான். மெல்ல கதவைத் தட்டியபடியே "சார்! சார்!" என்று கூப்பிட்டான்.

உள்ளே உட்கார்ந்திருந்த மனிதன் வெளியில் வந்து "தாங்கள் யார்? யாரைத் தேடுகிறீர்கள்?" என்றான். அதற்கு ராஜன் வெகு வணக்கமாக பதில் சொல்லத் துணிந்து "ஐயா! இதோ இந்த இடத்தில் குடி இருந்தவர்களைத் தேடி வந்தேன். அவர்கள் உள்ளே இருக்கிறார்களா!" என்று தனக்குத் தெரியாது போலவே கேட்டான்.

வந்த மனிதன் :—அப்படியா! இப்போது இந்த இடத்தில் சத்தியாக நான்தான் குடி இருக்கிறேன். நான் வெளியூரில் வேலையிலிருந்தவன். திடீரென்று இங்கு மாற்றப் பட்டேன். இங்கு குடி வந்தேன். நான் வருவதற்குச் சில தினங்களுக்கு முன்பே இங்கு காலியாக விருந்தது; நான் வந்தேன். முன் யார் இருந்தார்கள் என்றே எனக்குத் தெரியாது. உள்ளே இருப்பவர்களை விசாரியுங்கள்—என்றான்.

அதே சமயம் அவ் வீட்டுப் பின்புறம் குடி இருப்பவர் வந்தார். அவர் ஏற்கனவே ராஜசேகரனைத் தெரிந்தவராதலால் "என்ன சார்! பாரதியை தேடிக் கொண்டு வந்தீர்களா? அவர்கள் இங்கில்லையே! அவர்கள் உறவினரான ஒரு பாட்டியம்மாள் இங்கு சில காலமாக சகாயத்திற்கு வந்திருந்தார்கள். அவர்கள் தம்முடனேயே ஊருக்கும் அழைத்துக் கொண்டு போய் விட்டார்கள். உங்களுக்கு விஷயம் தெரியாதா! தெரிந்திருக்கு மென்றல்லவா நினைத்தேன்......ஐயோ பாவம்!......அவர்களுடைய குடும்பமே இப்படிப் பாழாகி விட்டது. மாசிலாமணிக்கு சற்றும் குணமே இல்லையாம்......உம்......தலைவிதி பாவம்......என்று கூறி விட்டார்.

இம் மொழியைக் கேட்ட வுடனே ராஜனுக்குக் கலக்கம் அதிகரித்தது. அவன் மன வேதனையை வெளிக் காட்டிக் கொள்ளாமல் "அப்படியா! இங்கில்லையா! மாசிலாமணிக்கு எப்படி இருக்கிறதோ பார்த்துவிட்டுச் செல்லலாமென்று வந்தேன். சில தினங்களாக நான் ஊரிலில்லை. அதனால் செய்தியே தெரியவில்லை. அவர்கள்

எந்த ஊருக்குப் போயிருக்கிறார்கள் என்பதாவது தெரியுமா!" என்று நயமாயும் பணிவாயும் கேட்டான்.

இதைக் கேட்ட அம்மனிதர் "எனக்குத் தெரியாது சார். இதோ இப்படி வாருங்கள். நான் உம்மிடம் உண்மையாக ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். நீர் அதை வித்யாசமாக நினைக்கக் கூடாது. நான் இவ் வீட்டில் வெகு நாட்களாக இருப்பதால் பாரதியைப்பற்றி வெகு வெகு நன்றாக அறிவேன். அவள் மகா பரிசுத்தமான கபடமற்ற பெண். வெகு புத்திசாலி. சாந்தமும் உத்தம குணமும் நிரம்பியவள். அத்தகைய யாவும் இருந்தும் அதிர்ஷ்டம் என்பதுதான் இல்லை பாவம்.

சார்! மாசிலாமணி படுத்திருந்த சமயத்தில் உங்களை நான் நன்றாக அறிவேன். அந்த அனாதைப் பெண்ணிடத்தில் நீங்கள் தான் உண்மையான அன்பும், அனுதாபமும் வைத்திருப்பதையும் நான் மனப்பூர்வமாக அறிவேன். இப் பாழும் உலகத்தையும் மக்களின் மதியீனத்தையும் நினைக்கின் ஏதோ செய்கிறது. இத்தனை பீடிகை எதற்குப் போடுகிறேன் என்றால், நல்ல அருமையான புஷ்ப மாலை குரங்கின் கையில் அகப்பட்டு நசுங்குண்டு பாழாவது போல பாரதிக்கு துணைக் கென்று வந்த பாட்டி பெரிய சனியன், எமனாக வந்தாள் என்றும் கூறலாம். வந்த சில நாட்களிலேயே பாரதியை கண் கலங்கச் செய்து அழைத்துக் கொண்டும் போய்விட்டாள்.

அந்த பிடாரிக் கிழவியின் செய்கையைக் கண்டிக்க எல்லோரும் நடுங்கி பயந்தார்கள். வாயைத் திறந்தால் அவர்கள் மேலேயே பாய்ந்து படுத்தாத பாடும் படுத்தி விட்டாள். இதற்குத் துணிந்து நான் சண்டை செய்து திட்டு வாங்கியதும் உண்டு. இன்னும் சில மடையர்கள் கிழவியுடனேயே கலந்துகொண்டு விட்டார்கள். உங்கள் விலாசம் எனக்குத் தெரியாது. பந்தாட்ட வீரன் (கிரிக்கெட் சாம்பியன்) என்ற விலாசத்திற்கு சென்ற மாதம் ஒரு கடித மெழுதினேன். அது எனக்கே திரும்பி விட்டது. தாங்கள் எப்படியாவது பிரயத்தனம் செய்து அந்த ஏழைச் சிறுமையை அப்பைசாசத்தினிடமிருந்து காப்பாற்றி ஆதரியுங்கள். பாவம். இங்கிருந்து போகும்

போது கண்ணீர் பெருக்கிக் கொண்டே சென்றாள். இந்த வீட்டிற்குள்ளேயே அவளுக்கு அனுகூலமானவன் நான் ஒருவன் தான். நான் ஏதேனும் பேசினால் அந்தப் பெண்ணின் தலைக்கே ஆபத்தைத் தேடி விடுவார்களே என்று நான் பேசாதிருந்து விட்டேன். சார்! வித்யாசமாக நினைக்காதேயுங்கள்.'' என்று வாஸ்தவத்திலேயே உண்மையான அனுதாபத்துடன் கூறினான்.

இதைக் கேட்ட நமது இளவலின் மனம் கொதித்தது. பாரதியின் நிலைமை மனத்தை உருக்கியது. அவனுக்கு அக் கிழவியின் ஊர் ஏது என்பது தெரியாதது பெரிய தடுமாற்றமாகி விட்டது. அந்த மனிதனுக்கும் அது தெரியவில்லை யாதலால் வேறு எப்படி விசாரிக்க முடியும். மன வருத்தத்துடன் அம் மனிதனிடம் விடை பெற்றுக் கொண்டு திரும்பினான்.

வெகு ஆவலாக ஓடி வந்த இடத்தில் கல்லைப் போட்டது போன்ற தகவலைக் கேட்டு இன்னும் மனங் கலங்கிக் கண்ணீர் பெருகியவாறு பயித்தியக்காரனைப்போல நடக்கிறான். அவ்வூரில் பாரதியைத் தவிர வேறு யாரையும் அவனுக்குத் தெரியாது. ஆகையினால் செல்வதற்கு வேறு இடமும் இல்லை. 'ஆஸ்பத்திரிக்குச் சென்று! மாசிலாமணியைப் பார்த்து விட்டு வரலாம்.' என்று நிச்சயித்தான். மனமோ சொல்லவறியாத வேதனையினால் தவிக்கிறது. பாரதியின் பிம்பம் இவன் முன் நின்று "என்னை யாதரிக்காது கை விட்டு விட்டாயே!'' என்று இடித்துக் கூறுவது போல இருக்கிறது. அந்த நிலைமையுடன் ஓர் வாடகை வண்டி யமர்த்திக் கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றான்.

வெகு தூரப் பிரயாணமாகையினால் வண்டி முற்றும் பலவிதமான யோசனையினால் தத்தளித்தவாறே ஆஸ்பத்திரியை அடைந்தான். அங்கு முதல் உத்யோகஸ்தன் இவனைப் பார்த்த உடனே அளப்பரிய சந்தோஷத்துடன் ஓடோடி வந்து "ஹல்லோ! ஹல்லோ! கிரிக்கெட்டு சாம்பியனல்லவா தாங்கள்! அடாடா! இன்று எதிர்பார்க்காது உங்களைக் காணக் கிடைத்தது. என்னை தங்களுக்குத் தெரியாது. நான் பட்டினத்திலிருந்த மட்டும் ஒரு

மேச்சுக்காவது நான் தவறமாட்டேன். உங்களுடைய ஆட்டம் எனக்கு மிக மிக ப்ரியம். ஏது தாங்கள் இந்த தரித்திர ஆஸ்பத்திரி யில் யாரைத் தேடிக்கொண்டு வந்தீர்கள்?'' என்று அபாரமான மதிப்புடன் கேட்டான்.

ராஜன் இதுவும் ஒரு நல்ல காலத்திற்குத்தான் என்று நினைத்து அவருக்குப் பதில் வந்தனமும் மரியாதையும் செய்துப் பின்னர் "நான் இங்குள்ள எனது நண்பன் மாசிலாமணியைப் பார்க்க வந்தேன். இப்போது அவனுக்கு உடம்பு எப்படி இருக் கிறது. சற்று தெளிந்திருக்கிறதா!' என்று கேட்டான்.

அதற்கு அவன் "ஊம்! தெளியவாவது பாவம்...ஆனால் முன் னைக்கு இப்போது எவ்வளவோ குணம் என்று கூறலாம். அடிக்கடி 'என் கண்ணே! என் செல்வமே! பாரதிதானே! என்னருமை அங் கச்சிதானே!' என்று பிதற்றுகிறான். வந்த புதிதில் அதுவும் இல்லை. அவன் பிதற்றுகிறதில் அவன் தங்கையை எண்ணிப் பிதற்றுவதாக நினைக்கிறேன். அவனுக்கு ஆள் அடையாளம் தெரிகிறதா பார்ப் போம் என்று எண்ணி என் சகோதரியையும், என் மனைவியையும் தனித்தனியே அழைத்து வந்து "இதோ உன் சகோதரி பாரதி'' என்று காட்டினேன்.

உடனே மாசிலாமணி எழுந்து இவர்களைத் தனித்தனியே உற் றுக் கவனித்து விட்டு "தூத்தூ...'' என்று முகத்தில் காரி உமிழ்ந்து விட்டு "இந்த மூதேவிகளா என் தங்கக் கிளி பாரதி! இல்லை; இல்லை. என் பாரதி நல்ல அழகு. நல்ல சமத்து. நல்ல பொண்ணு'' என்று பெரிதாக வர்ணிக்கத் தொடங்கிவிட்டான். அவனுடைய உள்ளுக் குள் என்னவிதமான வேலை செய்ததோ பாவம் தெரியவில்லை. கண் களில் மட்டும் தண்ணீர் ஆருப்ப் பெருகியது. பாரதி! பாரதி! என்று கூவியபடியே படுத்துவிட்டான். ஐயோ பாவம்! அவளைப் பார்க்க வேணும் என்று ஆசையாக இருக்கிறதோ என்னவோ? அவர்கள் ஒருவராவது இங்கு வரவில்லை. ஒரு செய்தியையும் காணவில்லை. எங்கள் அதிகாரியின் உத்திரவின்றி உள்ளே யாரும் போகக்கூடாது. எனினும் தங்களுக்கு நான் ஸ்பெஷலாக ஒருவருக்கும் தெரியாது

உள்ளே யழைத்துச் செல்கிறேன்; இது ரகஸியமாக இருக்கட்டும்.'' என்று கூறிக்கொண்டே ராஜனை உள்ளே யழைத்துச் சென்றான்.

தான் சற்றும் எதிர்பாராத விதமாகத் தனக்கு இந்த நண்பரின் பேருதவி கிடைத்ததானது அவனுடைய சந்தோஷத்தைக் கிளப்பி யது. மனத்திற்குள் புதை பாணங்கள் போன்று தோன்றி கொதிக் கும் விசனக் குவியலுக்குள் இந்த சிறிது சந்தோஷமாவது கிடைக்கு மென்று நினைக்கவில்லை யாதலால் நினையாத விஷயம் எதிர் வந்து முடியும் என்பது மெய்யாயிற்று.

எந்த மனிதருக்கும் ஒரு வகையில் இல்லாவிட்டால் ஒரு வகை யிலாவது தனித்த கவுரவம் ஏதேனு மிருக்குமாயின் அவர்களின் கவு ரவமும் பெருமையுமே அவர்களைச் சில சமயத்தில் காப்பாற்று கின்றன; துணை புரிகின்றன. எதிர்பாராது உதவுகின்றன. பலர் இவர்களை நேசித்து உதவ முன்வரவும் செய்கின்றன. ஒருவிதத்திலும் பெருமை யில்லை எனில் கேட்பார் யார்? நான் இப் பந்தாட்டத்தில் பெற்ற புகழ் இன்று இச் சிறிய உதவியைச் செய்யும்படியாகத் தூண்டியதுபோலும்.'' என்று தனக்குள்ளேயே எண்ணிச் சிறிது மகிழ்ந்தான்.

அப் புதிய நண்பன் ராஜனை அழைத்துக்கொண்டு மாசிலா மணி இருக்கும் இடத்திற்குச் சென்றான். அந்தோ! கோரமான கண் ராவியைக் கண்டு ராஜனால் சகிக்கக்கூடவில்லை. அங்கு உருவம் குலைந்து தாடியும் மீசையும் வளர்ந்து முகம் விகாரப்பட்டுப்போய் தேகம் குச்சியிலும் குச்சிபோன்று மெலிந்து கண்கள் குழிந்து விகார ரூபமாக நிற்கும் மாசிலாமணியைக் கண்ட நமது வாலிபனின் உள் ளத்தில் நெருப்பு மலை புரண்டது போன்ற வேதனை உண்டாகி விட்டது.

அந்தோ! மகா பரிசுத்த வீரன்; பந்தாட்ட தீரன்; சுகுமார சரீரன்; யௌவன ரூப சிங்காரன். எல்லாம் ஒருங்கு அமையப்பெற்ற இந்த மனிதனின் கதி இவ்விதம் ஆய்விட்டதற்குக் காரணம் மகா பாவியான நானல்லவோ!..ஐயோ! என்னாலன்றோ இவன் கதி இப்படி யாயிற்று. குடும்பம் அதோகதி யாயிற்று.'' என்று தனக்குள்

எண்ணிப் புழுவெனத் துடித்தவாறு "என் நண்பா! மாசிலாமணி! மாசிலாமணி!" என்று இறுகத் தழுவி கட்டிக்கொண்டு தேகம் குலுங் கப் புலம்பினன்.

மாசிலாமணி பயித்தியமாயிற்றே தன்னை என்ன செய்வானே என்பதையே மறந்து ராஜசேகரன் புலம்பினன். மாசிலாமணி பாவம் இன்னதென்று வாய்விட்டுச் சொல்வதற்குத் தெரியாது தத்தளிக் கின்றான். அவன் கண்களிலும் நீர் பெருகுகின்றது. அவன் ராஜ சேகரனை ஒன்றுமே செய்யவில்லை. எனினும் சில நிமிடங்களுக்குப் பிறகு ராஜசேகரனின் தலையை நிமிர்த்திப் பார்த்தான். "தூத்து!... நீ நல்ல கட்டைத் தடியனல்லவா!...என் செல்லக் கண்மணி பாரதி என்று பார்த்தேன்...நீ யாரடா!. தடிப்பயலே! நீ ஏண்டா இங்கு வெறுமை வந்தாய்.........

ஹி ஹி ஹி...ஓகோ நீதான் நீ...நீதான்...அந்த பந்தாட்ட...வீ ......ர.......ன்......ராஜ......சே.........க.......ர..........ன்......... ஹாஹ்ஹஹ்ஹா! எனக்குத் தெரியாதோ! பேட்டு எங்கேடா! பந்து எங்கேடா! வாடா போட்டிப் பந்தய ஆட்டம் ஆடலாம். ராஜா!..... ராஜா......கோவிச்சிக்காதே! தெரியுமா......என் கண்மணி பாரதி எங்கே...ஒனக்குத் தெரியுமா......அவளை எனக்குக் காட்டமாட் டாயா...பொட்டியிலா போட்டு மூடிவெச்சிருக்கே...நீ நல்லவனுச் செ...பாரதியைத் திறந்து விடு. ராஜா...தம்பிடிக்கு பப்ரமெண்டு தருவேன்...என்று கண்ணீர் பெருகியபடியும், சிரித்துக் கோணி, நாணி உடம்பை வளைத்துக்கொண்டே கேட்டான்.

இம் மொழியைக் கேட்ட ராஜனின் உள்ளம் இன்னும் அபார மான கொதிப்பையும் விசனத்தையும் அடைந்து கட்டு மீறிப் பத றியது. இவனுக்கு என்னவிதமான பதிலளிப்பான் பாவம். தன் சகோதரியைப் பார்க்கவேண்டுமென்கிற ஆசை மட்டும் பரிபூர்ணமாக இருப்பதை யறிந்தான். மாசிலாமணி! என் நண்பா! என்னை நன்ருகத் தெரிகிறதா! உன் சகோதரியைப் பார்க்கவேண்டுமாப்பா!... நீ வீட்டிற்கு வருகிருயா! நான் உன்னை அழைத்துக்கொண்டு போகட்டுமா?" என்று கேட்டான்.

பெரியதாக நகைத்துக்கொண்டே மாசிலாமணி "போடா போ! என் சகோதரிதான் செத்துப்போய்விட்டாளே. நீ தான் கொண்ணுப்புட்டயெ! என்னையுங் கொண்ணுபுடப்போறையா? போடா; போடா!" என்று பளீரென்று இரண்டு அடி விட்டான். பைத்தியத்தின் செய்கைக்குக் கேட்கவேண்டுமா? இதற்குள் அந்த புதிய நண்பர் ராஜனை நோக்கி "ஐயா! நேரமாய்விட்டது. யாரேனும் பார்த்து விட்டால் என்னிலைமை கேவலமாகி, என் குட்டு வெளியாகி விடும். ஆதலால் நீங்கள் வந்துவிடுங்கள்" என்று கூப்பிட்டான். ராஜனும் அதற்குமேல் என்ன செய்வான் பாவம்! கண்ணீர் பெருகியபடியே திரும்பிவிட்டான்.

தோன்றாத் துணை என்றதன் உண்மையை உணர்ந்துகொண்டான். பிறகு அம் மனிதனோடு பேசுகையில் "ஏன் சார்! இவனைப் பார்க்கவோ, இவனைப்பற்றி விசாரித்தோ யாரும் வரவில்லையா! கடிதங்கூட எழுதவில்லையா?" என்று கேட்டான்.

நண்பன்.—எப்போதோ ஒருமுறை இவருடைய சகோதரியார் வந்தார்கள். ஆனால் முன்னர் உத்திரவு வாங்காமையினால் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. நான் அப்போது அதிக வேலையிலிருந்ததால் கவனிக்கவில்லை. பிறகு அவர்களைப்பற்றி ஒரு தகவலும் இல்லை—என்றான். பந்தாட்டத்து மகிமையைப்பற்றிச் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தான். ராஜனுக்கு தடபுடலாக உபசரித்து வழியனுப்பினான். ராஜனும் வெகு பக்ஷத்துடன் விடை பெற்றுக்கொண்டு திரும்பி நேரே ரயிலடிக்கே சென்றுவிட்டான்.

"பாரதியை ஒரு முறை கண்ணாரக் கண்டால் மாசிலாமணியின் சித்தம் தெளிவு பெறுமோ என்னவோ அந்த நங்கை மடவன்னம் எங்கிருக்கிறாள் என்று நாம் எப்படி அறிவது. இதென்ன சோதனை?"...என்று மனம் முறிந்துபோய் ஸ்டேஷனில் அப்படியும் இப்படியும் உலாவியவாறு சிந்தித்துக்கொண்டிருந்தான். அப்போது ஒரு பையன் தினசரிப் பத்திரிகை விற்றுக்கொண்டு போனான். அதில் கீழ்வருமாறு கொட்டை எழுத்தில் எழுதியிருந்த விஷயம் கண்ணில் பட்டது. உடனே அதைக் கவனித்தான்.

# இனும்! இனும்!

## இனும்! ஆயிரம் ரூபாய் இனும்!

**வீராயியின் கொலே விஷயமாக நேற்று வந்த விஷயத்தின் தொடர்ச்சி.**

குற்றவாளியாகிய விசாலாட்சியம்மாளுடைய மகள் காமு என்கிற காமாட்சியம்மாளும், இந்தக் கொலே விஷயத்தில் சம்பந்தப் பட்டிருப்பதாய் முக்கியமான சாட்சியத்தினல் தெரியவருகிறது. அந்தம்மாள் தன்னுடைய கள்ள கருப்பத்தை அறிந்துகொண்ட வீராயி அம்மாளேத் தாயாருடன் சேர்ந்துகொண்டு கொலே செய்துவிட்டு ஓடிவிட்டதாகத் தெரிகிறது. வண்டிக்கார வரதன், அவனுக்கு உடந்தையான கன்னியம்மாள் இருவரின் வாக்குமூலத்திலிருந்தும், விசாலம் குடி இருந்த வீட்டுக்காரர்கள், அக்கம் பக்கம் உள்ளோர்களின் வாக்குமூலத்திலிருந்தும் காமு என்கிற காமாட்சியம்மாள் கூடா வொழுக்கத்தினல் கள்ளக் கருப்பமாகி விட்டதாயும் அதை வீராயி என்கிற இறந்துபோன அம்மாள் தெரிந்துகொண்டதாயும் அது தன் உறவினர்களுக்கு அந்தம்மாள் மூலமாகத் தெரிந்துவிடும் என்கிற பயத்தினல் தாயும் மகளும் சேர்ந்து உடனே அவளே அடித்துக் கீழே தள்ளிக் கொலே செய்துவிட்டு அன்றிரவே ஓடிவிட்டதாயும், நடுமத்தியில் காமுவுக்குப் பிரஸவ வேதனே யுண்டாகிவிட்டதாயும், வரதன் கன்னி இருவரின் சகாயத்தால் அவளுக்குப் பிறந்த குழந்தையைக் கொலே செய்துவிட விசாலாக்ஷி ஏற்பாடு செய்துவிட்டதாயும், வரதனும் கன்னியும் கொலே செய்ய சம்மதிக்க மாட்டோமென்று கூறியதால் காமுவே தன் கள்ளக்காதலனுடைய கையாட்களின் உதவியால் வரதனேயும் கன்னியையும் கட்டிப் போட்டுவிட்டுத் தன் தாயாரையும் அவ்விடத்திலேயே அடைத்துவிட்டு அவள் கள்ளக் காதலனுடன் ஓடிவிட்டதாயும் சரியான வாக்குமூலங்களும் சாக்ஷிகளும் கிடைத்திருக்கின்றன.

ஆனல் விசாலாக்ஷி கூறுவதற்கும் வரதன் கன்னியம்மாள் இருவரும் தனித்தனியாகக் கூறுவதற்கும் மாறுதல் அதிக மிருப்பதால் இதையே முற்றிலும் நம்புவதற்கில்லை என்று காமுவையும் கண்டு பிடித்த பிறகு விசாரித்தால்தான் முற்றும் விளங்கும் என்று போலீஸார் அனுமானிப்பதால் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. காமுவின் புகைப்படம்—அவள் பள்ளியில் படித்து வந்த காலத்தில் எடுத்தது—இப்போது கிடைத்திருக்கிறது. இப்போதும் அவள் ஏறக்குறைய இதே மாதிரியாகவிருப்பதாக எல்லோரும் கூறுகிறார்கள். இந்த சாயல் உள்ள அந்தம்மாளைப் பிடித்துத் தருகிறவர்களுக்குப் போலீஸார் ஆயிரம் ரூபாய் இனம் கொடுப்பதாக உறுதி கூறி யிருக்கிறார்கள். தகவல் தெரிந்தவர்கள் நேரே போலீஸில் தாக்கல் செய்யவும். மற்ற விவரங்கள் கிடைப்பின் பின்னல் வெளியாகும்......

என்ற அபாண்டமானதும் மனத்தையே கலக்கக்கூடியதுமான செய்தியைப் படித்ததும் நமது வாலிபன் அப்படியே தம்பித்து ப்ரமித்து சில நிமிடங்கள் ஊமை போலாய்விட்டான். "என்ன! என்ன! காமு கள்ளக் கருப்பமாகிவிட்டதை மட்டும் தானே ஒப்புக் கொண்டு விட்டதால் அது கிடக்கட்டும். வீராயி என்றவளைக் கொலை செய்துவிட்டு வந்தவளா!...ஆகா! இந்த ரகஸியத்தை நம்மிடம் ஏன் மறைத்தாள்...ஆம்...இது ஏதோ கட்டுக் கதை....

களங்கமற்ற முகம், பால் வடியும் கபடமற்ற முகம், இளம் பிறையைப் போல துல்லியமான முகம், பளிங்கு போன்ற மனத்துடைய காமுவா கொலை செய்திருப்பாள்! ஊஹூம். ஒருபோதும் செய்திருக்கமாட்டாள். குழந்தையை வரதனும் கன்னியும் கொலை செய்ய மறுத்ததாக பொய் சாக்ஷிய மன்றோ கூறி யிருக்கிறார்கள். அந்தப் படுபாவி கிழவி குழந்தையை தயை தாக்ஷிண்யமின்றி மென்னியைத் திருகும்போது நாம் கண்டோம். அங்ஙன மிருக்க அப்பாதகர்கள் தாங்கள் தப்பித்துக்கொள்ளும் பொருட்டு அப் பேதைப் பெண்ணின் தலைக்கே தீம்பு வைத்துவிட்டதாக நன்ருகத் தெரிவதுடன் அவளை யாதரித்த அகங்காரத்தினல் என்னையும் அதில் சம்

பந்தப்படுத்தி அடாத மொழியை மனந் துணிந்து கூறி இருக்கிறார்கள். அடாடா! இம்மாதிரியான சந்தர்ப்பங்களைத்தான் சோதனை என்று கூறுவது போலும். ஐயோ! ஏற்கெனவே என் தலையில் அபாண்ட பழியைப் போட்டு என்னை படாத பாடு படச் செய்துள்ள அப் பட்டிக்காட்டு ஜனங்களின் காதில் இச் செய்தி விழுந்தால் என் கதி இன்னும் மோசமாகி அவர்கள் ஊர்ஜிதம் செய்த அனியாயத்தை ஸ்தாபனமன்றோ செய்துவிடுவார்கள்.

அந்தோ! ஈசனே! உபகாரம் செய்யும் எண்ணத்தைக் கொடுத்து, செய்வித்தாய். உடனே அபகாரமா செய்து என்னை வாட்டவேண்டும். அடாடா! என் நிலைமையை—இப் படாப் பழியான வார்த்தையை ஒருகால் பாரதி அறிந்து விட்டால் என் கண்மணி என்ன நினைப்பாள்? அந்தோ! என்னிடம் கொண்ட மரியாதை எல்லாம் சிதைந்து இடிந்து பொடித் தூளாகிவிடுமே! என்னை மோசக்காரன் என்றும், கொலைக்கு உடந்தையாயிருந்தான் என்றும், கள்ளத்தனமாக ஒரு பெண்ணை வைத்துக் கொண்டிருக்கும் சண்டாளனு இவன் என்றும் என்னை மிகவும் கேவலமாக நினைத்து வெறுப்பாளல்லவா! என்னுயிர், என்னுவிக்கமுதம் போன்ற பாரதி என்னை வெறுத்தால் நான்...தாளமாட்டேன்...என்னல் சகிக்கமுடியாது...ஏ...சர்வேசா! என்ன சோதனை?'' என்று தத்தளித்தான். தனக்கும் பயித்தியம் பிடித்துவிடுமோ என்ற பெரிய சந்தேகம் உண்டாகிவிட்டது.

“ரயிலடியில் தான் சித்தம் சிதறிப் பித்தன் போலக் கலங்கி நிற்பதை யாரேனும் கண்டால் பரிகஸிக்கமாட்டார்களா! ஐயோ! விஷயங்கள் எத்தனை எக்கச் சக்கமாகிவிட்டன. காமு எங்கு சென்று அலைகின்ருளோ! யார் கண்ணில் பட்டு கண்டுபிடித்துக் காட்டிக் கொடுத்து விடுவார்களோ! ஒன்றும் தெரியவில்லையே! என்ன செய்வது? இது பாரதிக்குத் தெரியுமுன்பு நான் அவளிருப்பிடமறிந்து உண்மையை விளக்கும் சமயம் எப்படி வாய்க்கும்?'' என்று பல விதமாக யோசனை செய்துகொண்டே இருக்கையில் ரயில் வரும் சத்தம் கேட்டது.

ஜனங்களெல்லாம் எழுந்து மூட்டைகளையும், பெட்டி படுக்கைகளையும் தூக்கிக்கொண்டு அவனை இவனை என்று தம் தம் மனிதர்களைக் கூவி யழைத்தவாறு ரயிலடியில் ஆயத்தமாக நின்றார்கள். அது வரையில் தன் போக்காக கவலையே வடிவாய் யோசனை செய்து கொண்டிருந்த நமது ராஜசேகரன் டிக்கட்டு வாங்காமல் மறந்துவிட்டதால் அப்போதே நினைத்துக்கொண்டு டிக்கட்டு வாங்கிக்கொண்டு அவசர அவசரமாக வந்து ரயிலேறுவதற்குள், அந்த ஸ்டேஷன் மிகவும் சிறியதாகையினால் 2 நிமிடத்திற்கு மேல் வண்டி நிற்காமல் ஊதிக்கொண்டே ஓட வாரம்பித்துவிட்டது.

ராஜன் டிக்கட்டை வாங்கிக்கொண்டு ஓடி வந்தும் பயனில்லாது போய்விட்டது. ஓடும் வண்டியில் ஏறமாட்டாமல் ராஜன் நின்று விட்டான். செல்லும் வண்டியைப் பார்த்துக்கொண்டே நிற்கையில் அதில் ஸ்திரீகள் கம்பார்ட்மெண்டில் விசனமே உருக்கொண்டு வாடி வதங்கித் துவண்டு போய் தலைவிரி கோலமாக ஓர் பெண் பேதையின் உருவம் ராஜனின் கண்களுக்குப் பளிச்சென்று தெரிந்தது.

அம்மாதிரி தெரிந்த வினாடியிலேயே ராஜன் "ஹா! அதோ! அதோ! என் கண்மணி! இவ்வண்டியில் செல்கிறாள். அவ்வுருவத்தைப்பார்த்தால் கட்டாயம் அவளைப் போலவே இருக்கிறது. ஆம்... சந்தேகமே இல்லாமல் அவள் தான். ஐயோ! வண்டி போய் விட்டதே! அவ்வனாதைச் சிறுமி எங்கு செல்கிறாள் என்பது தெரியவில்லையே! ஹா! என் கண்மணியின் உருவம் போலவே தோன்றுகின்றதே! விசாலமான சந்திர பிம்பம் போன்ற முகம் பளிச்சென்று மின்னல் தோன்றி மறைவது போல மறைந்துவிட்டதே! எங்கே எந்த இடத்திற்கு அனாதையாய், ஒண்டியாய் வண்டியில் என் காதல் ரத்தினம் செல்கிறாளோ நான் எப்படி யறிந்து உதவி புரிவேன்? ஈசா!" என்று பலவிதமாக எண்ணமிட்டவாறு பித்துப் பிடித்தவன் போல வண்டியைத் துடர்ந்து தன்னை மறந்து ஓடுகிறான்.

## 14-வது அதிகாரம்

### சிறகொடிந்த பறவைகள்—மருமகன் பிரஸன்னம்

ஒன்பதாவது அதிகாரத்தின் இறுதியில் எழுதியபடி "ஐயோ! ஐயோ வென்ற தீனக் குர லைக் கேட்டு அந்த திக்கை நோக்கி வெகு தைரியமா யும், ஒரு விதமான பச்சாத்தாபத்துடனும் சென்ற நமது கதாநாயகி யாகிய பாரதி சிறிது தூரம் சென்றாள். கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் ஒன்றும் தெரியவில்லை. இருள் முற்றிலும் சூழ்ந்துகொண் டிருப்பதால் ஒன்றும் தெரியாது தடுத்தது. ஆங்காங்கே நிற்கும் மரங்களும், வயலில் வேலை செய்துவிட்டும், வயல் சொந்தக்காரர்கள் வயலைப் பார்வை யிட்டுக்கொண்டும் செல்லும் சிலரைத் தவிர வேறு யாரும் காணப்படவில்லை.

"ஐயோ என்ற தொனி நன்றாகக் கேட்டதே! உடனே ஒன் றும் காணவில்லையே! என்ன மாயம் இது!" என்று பாரதி நினைத்து சற்று தியங்கி நின்றாள். மீண்டும் சிறிது நேரத்திற் கெல்லாம் ஓர் சிறிய குழந்தை யழும் சப்தம் கேட்டது. அதுவும் மிக்க பலஹீனப் பட்டதுபோன்றும் தொண்டையை அடைத்துக்கொண்டு அழுவது போலும் கேட்டது. பாரதி அதைக் கேட்டு இன்னும் சிறிது தூரம் சென்றாள்.

குரல் சமீபத்தில் வருவது போலக் கேட்டதால் நாற்புறமும் பார்த்துக்கொண்டே சென்றாள். ஓர் பெரிய மரத்தடியில் சப்தம் வருவது போலத் தெரிந்ததும் அங்கு சென்று பார்த்தாள். அந்தோ! பரிதாபம்! பரிதாபம்! ஒரு சிறிய பச்சைக் குழந்தை மண் மீது குப் புறக் கிடந்து அழுது தவிக்கின்றது. அதன் பக்கலில் பால் வடியும் முகத்துடன் தாமு நினைவற்றுப் பிணம் போலக் கிடக்கிறாள்.

இந்த கோரக் காட்சியைக் கண்ட பாரதி மனந் தவித்து திடுக்கிட்டு தன்னிடையிலிருந்த குடத்தைக் கீழே போட்டுவிட்டு ஓடிப்போய் குழந்தையைத் தூக்கி முதலில் துடைத்து மார்போடணைத்துக்கொண்டு அதைச் சமாதானம் செய்தவாறு கீழே விழுந்து கிடக்கும் காமுவைக் கவனித்தாள்.

காமுவின் தோற்றமும், அவள் விழுந்து கிடக்கும் கோரக் காட்சியும் ஒன்று கூடி "ஐயோ! இப்படியும் ஒரு பரதேசி போன்ற உருவம் என்னைத் தவிர வேறு ஒன்று கூட இருக்கின்றதா! ஐயோ! என்ன துல்லியமான முகம்! என்ன அழகான வசீகர முகம்! ஏன் இவள் இவ்விதம் விழுந்து கிடக்கவேண்டும்?" என்று பலவாறு சிந்தித்தபடியே குழந்தையை ஒரு கையால் அணைத்துக்கொண்டு மற்றொரு கையால் காமுவின் தலைமயிரைக் கோதிவிட்டு, தான் கொணர்ந்த குடத்து ஜலத்தை முகத்தில் தெளித்துக் கண்ணைத் துடைத்து விட்டு "அம்மா!...அம்மா!...இதோ கண்ணைத் திறந்து பாரு..என்று கெஞ்சியும், கொஞ்சியும் அஞ்சுகம் போன்று கூறினாள்.

சிறிது நேரத்திற் கெல்லாம் காமு கண்ணைத் திறந்தாள் களைப்பு மேலீட்டால் மூச்சு மட்டும் துரத்தி யடிக்கின்றது. பேசக் கூடவில்லை. கண்களில் கண்ணீர் பெருகி ஆறாய் வடிகின்றது. மெல்ல தன் கைகளைத் தூக்கி பாரதியின் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள். விம்மி விம்மிக் கதறியபடியே தாகமாக இருக்கிறதென்று கையை ஜாடை செய்தாள்.

இந்த கோரக் காட்சி பாரதியின் மனத்தைக் கலக்கி துயரக் கடலில் துளைந்திடச் செய்தது. தன்னைப் போன்ற ஓர் பரதேசியாகத்தானிருக்கவேண்டு மென்ற ஓர் எண்ணம் அவளை யறியாமல் மனத்தில் உதித்தது. உடனே தீர்த்தத்தை வாயில் வார்த்தாள். வெகு களைப்பினால் தண்ணீர் நிறையக் குடித்துவிட்டுச் சில வினடிகள் அசையாது அப்படியே படுத்திருந்தாள். பிறகு சற்று நிதானித்துக்கொண்டு "என் தாயே! அம்மணீ!" என்று அதற்குமேல் பேசமாட்டாது குலுங்கப் புலம்பியபடியே எழுந்தாள். தள்ளாடி மீண்டும் சாய்ந்தாள்.

பாரதி அவளைப் பிடித்துக்கொண்டு "அம்மா! நீ யாரு! இத்தனை சின்ன குழந்தையுடன் தனியாக ஏன் இப்படி வந்து விழுந்துவிட்டாய்? உன் வரலாறு என்ன? உன்னோடு யாரும் வரவில்லையா?" என்று அடுக்கடுக்காய் கேட்டாள். இதற்கு அப் பேதைப் பெண்மணி என்ன விதமான பதிலைக் கூறுவாள் பாவம். வாய் விட்டுக் கூறுவதற்கு என்ன யோக்யதை யிருக்கிறது. எனினும் மெல்ல தைரியத்தோடு பேசத் தொடங்கி "அம்மணி! நான் சகல விஷயங்களுக்கும் பதில் சொல்லுகிறேன். இப்போது இருள் சூழ்ந்துவிட்டதால் நாம் இருவரும் சிறியவர்கள் இங்கிருப்பது கூடாது. ஆதலால் முதலில் என்னை எங்கேயாவது அழைத்துச் சென்றுவிடு. பிறகு விவரமாகப் பேசுவோம். உன் வீடு எங்கே இருக்கிறது?" என்று கெஞ்சிக் கேட்டாள்.

பாரதிக்கோ இதைக் கேட்டவுடன் மனம் தவித்தது. என்ன செய்வாள் பாவம். இளகிய மனத்தில் பச்சாத்தாப ஊற்று எடுத்துப் பெருகுகின்றது. ஆனல் "என்னை தற்போது கடவுள் மனித ரூபங் கொண்ட ராக்ஷஸியிடமல்லவா ஒப்புவித்து விட்டார். அந்த கோர அரக்கியின் முன் நான் என்ன தைரியத்துடன் இப்பேதையை அழைத்துச் செல்லுவேன்? இவளுடைய வரலாறோ ஒன்றும் தெரியாது. இந்த சிறிய பச்சைச் சிசுவைப் பார்த்தாலோ இது பிறந்து சில தினங்களேதான் ஆகி இருக்கு மென்று தெரிகிறது. ஐயோ பாவம்! இப் பச்சைக் குழந்தையுடன் இப் பலஹீண நிலைமையில் இவள் இவ்விதம் வரக் காரணம் என்ன வென்று கேட்டால் நான் அந்த தாடகைக்கு என்ன விதமான பதிலளிப்பேன்?

ஐயோ! இச் சமயம் என் அன்னை இருப்பாளேயானல் நான் எவ்வளவு தைரியமாக இப்பேதைப் பெண்ணையும், அழகிய இச்சிறிய குழந்தையையும் வீட்டிற்கு அழைத்துச் செல்வேனல்லவா! ஹூம். என்னருமை அண்ணனாவது சித்த ஸ்வாதீனத்துடன் இருப்பானேயானல் எத்தனை நன்ருக ஆதரிப்பான். அந்தோ! என்னுருயிர்க் காதலரை நான் மணம் செய்துகொண்டு உரிமையுடனிருப்பேனேயானல் நான் அவர் அனுமதி பெற்று எத்தனை சந்தோஷத்

திடன் ஆதரிப்பேன். எல்லாம் என் விஷயத்தில் பகல் கனவாக மாறி, யாவும் வீணாகிவிட்டதோடு என் பிழைப்பே கேவலம் அடிமையிலும் அடிமையாகவன்றோ ஆய்விட்டது. ஈசா! என்ன செய்வேன்?

ஐயோ பாவம்! நான் பதில் சொல்லாது யோசிப்பதைக் கண்டு நாள் என்ன சொல்வேனோ என்று என் முகத்தையே பரிதாபம் வழியப்பார்க்கிறாள். நான் என்ன பதில் சொல்வது. அவள் நிலைமையைப் பார்த்தால் ஏதோ ஆபத்தினால் அவதிப்படுவதாக மட்டும் தெரிகிறது.........இருக்கட்டும். இனி நாம் தைரியத்தை விட்டால் காரியம் கெட்டுப் போய் விடும்......ஆ...... இப்போது தான் நினைவிற்கு வருகிறது. கிழவி இன்று பக்கத்து ஊரில் நடக்கும் திருவிழாவிற்குப் போகப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தாளே! ஒருக்கால் இத்தனை நேரத்திற்குள் போய் விட்டாளோ என்னவோ பார்ப்போம்......ஆம்......'' என்று தனக்குள் ஏதோ தீர்மானம் செய்து கொண்டு பிறகு காமுவை நோக்கி,

"அம்மா! உனது விவரம் ஒன்றும் தெரியவில்லை. எனினும் நீ ஏதோ பேராபத்திலிருப்பவளாயும்—அனாதை என்றும்—உன்னைப்பார்க்கும் போது தெரிகிறது. நான் கூறாமலேயே நான் ஓர் பெரிய அபாக்யசாலி, துரதிருஷ்ட தேவதை என்று நீ தெரிந்து கொண்டிருப்பாய். இதற்குமேல் இங்கு சொல்வதற்கு எனக்கு நேரமில்லை; நான் முதலில் வீட்டிற்குச் சென்று பார்த்துவிட்டு மீண்டும் வருகிறேன். நீ என் பின்னோடு வந்து நான் சொல்லும் இடத்தில் தங்கிவிடு; பிறகு அழைத்துச் செல்கிறேன்.'' என்று கூறிவிட்டுக் குழந்தைக்கு முத்தங் கொடுத்து, அதை காமுவின் கையில் கொடுத்துவிட்டுத்தான் கொண்டு வந்த குடத்துடன் வேகமாக வீட்டிற்கு வந்தாள்.

அப்போது நமது தாடகா தேவியாகிய வள்ளியம்மாள் பாரதியைக் தேடிக் கொண்டு எதிரில் வந்து கொண்டிருக்கிறாள். வாயிலோ வசை வர்ஷம் பெரிய தாரையாக வருஷிக்கின்றது. பாரதி புலியைக் கண்ட மான் போலத் துவண்டு வாடி நடுங்கியபடியே வருவதைக் கண்டு அதிக ஆத்திரங் கொண்டு "ஏண்டி!

பஜாரி! தடிச்சிறுக்கி! உன்னைக் கேட்பார் புடைப்பார்கள் இல்லை என்று நினைத்துக் கொண்டாயா! தண்ணீர் கொண்டுவரச் சென்ற கழுதைக்கு இத்தனை நேரம் என்னடி! யாருடன் வம்பளந்து கொண்டிருந்தாய்? எந்த தடியனை இங்கேயும் பிடித்து விட்டாய். இத்தனை தைரியமா உனக்கு. நான் திருவிழாவுக்குப் போக வேண்டுமென்று சொன்னது உன் காதில் விழவில்லையா! உன் காது அடைத்து விட்டதா!'' என்று ஏதேதோ சரமாரியாக ஆரம்பித்து விட்டாள்.

இத்தனை பாணங்களையும் தாங்கிக் கொண்டு நமது பேடன்னம் பதில் பேசாமலும் தலை நிமிராமலும் குனிந்தபடியே போய் விட்டாள். வள்ளியம்மாளின் சகாக்கள் "ஆமாண்டி! சாகிற காலத்தில் சங்கரா! சங்கரா! என்பது போல இந்தச் சனியன் ஒன்று உனக்கு வந்து சேர்ந்ததே! பட்டினவாஸத்துத் திமிரில்லவா இவள். இவளுடைய போக்கு இப்படி இல்லாமல் வேறு எப்படி இருக்கும். உன் தலைவிதியடி! விதி! இந்த அஸத்துப் பீடையை அடக்கினால் மட்டும் அது அடங்கி மணமாக நடக்குமா என்ன? குப்பை மேயும் புத்தி நாயிக்கு விடுமா! அது போலத்தான்''...என்று தாளந்தட்டி ஓத்துப் பாடினார்கள்.

பாரதி வீட்டிற்கு வந்ததும் "பாட்டீ! வீணாக ஏன் இப்படி கண்டதுக்கெல்லாம் என்மீது அடாது பேசிப் படாது படுத்துகிறாய்? நான் தண்ணீர் மொள்ளும் பாத்திரம் தேய்க்க மண்ணெடுத்தேன். அங்கு ஒரு சிறிய தேள் இருந்தது; என்னைக் கொட்டி விட்டது. அந்த பாதை தாங்காமல் கையைத் தண்ணீரிலேயே வைத்துக் கொண்டிருந்தேன். மண்ணையே போட்டுத் தேய்த்தேன். சிறிது வலி குறைந்ததும் குடம் எடுத்து வந்தேன். குடத்தைத் தூக்க மாட்டாத நிலைமையில் எவ்விதம் வருவது?'' என்று தன்னை மீறிப் பதில் கூறி விட்டாள்.

இம்மா பெருங் குற்றத்தை அக் காளிகர்தேவி தாங்குவாளா? தத்திக் குதித்து தாண்டவமாடி விட்டு "தடிக் கழுதை! என்னை எதிர்த்துப் பேசும் தைரியம் உனக்கு வந்து விட்டதா! ஆகா!......... உம். நான் திருவிழாவுக்குச் சென்று விடியற் காலையில் தான் வரு

வேன். வீட்டில் ஜாக்ரதையாக இரு. முத்தி உனக்குத் துணை படுப்பாள்.'' என்று கூறிவிட்டு திருவிழாவுக்குச் செல்லும் அவசரத்தில் அம்மட்டுடன் தொலைந்து போய் விட்டாள்.

பாரதி குடத்தை வைத்து விட்டு, விளக்கை வெளிச்சமாகப் பொருத்திவிட்டு வீதிப் பக்கம் சென்று எட்டிப் பார்த்தாள். பிறகு கொல்லை வழியாய்ச் சென்று பார்த்தாள். "ஐயோ பரிதாபம்! காமு குழந்தையை வைத்துக் கொண்டு பரதேசிபோல நின்று கொண்டு வழி பார்க்கும் கண்ராவியைப் பார்த்தாள். அவள் மனம் அப்படியே கரைந்துருகி இளகி விட்டது. மெல்ல சென்று காமுவை நோக்கி "அம்மா! இதோ தெரியும் சந்து வழியே வந்தால் அது ஒரு தெருவில் கொண்டு விடும். அந்தத் தெருவில் ஒரே ஒரு பெரிய மாடி வீடு தானிருக்கிறது. அந்த வீட்டிற்கு மூன்றுவது வீடு நான் இருக்கும் வீடு. என் பெயர் பாரதி. நீ தாராளமாக வந்து அவ் வீட்டில் கதவிடித்து என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டுக்கொண்டு வா. நான் கதவைத் திறந்து அப்போது தான் பார்த்ததுபோல உன்னை வரவேற்கிறேன். யார் என்று கேட்டால் பள்ளிக்கூடத்து சினேகிதை. தூரத்து உறவு என்று சொல்லுகிறேன். நீயும் அப்படியே நடித்து விடு. பிறகு கடவுள் விட்ட வழியாகட்டும்.'' என்று கூறி விட்டு வந்து விட்டாள்.

5 நிமிடத்திற்கெல்லாம் காமு வீதி வழியே வந்து பாரதி சொல்லியபடியே அழைத்துக் கதவை இடித்தாள். பாரதிக்கு முத்தி என்கிற ஒருத்தி துணைக்குக் கோட்டான் போல நடையில் உட்கார்ந்து வெத்திலை பாக்கு போட்டுக் கொண்டிருந்தவள் "யாரது? பாரதியை இன்னேரத்தில் கூப்பிடுகிறது?'' என்று சிள்ளென்று சீறி விழுந்தபடியே கதவைத் திறந்தாள்.

இதற்குள் பாரதி "யாரது?'' என்று ஒன்று மறியாதவள் போல ஓடி வந்தாள். இதற்குள் காமு "ஆகா! என்ன பாரதி! என்னைத் தெரியவில்லையா! நான் தான் காமு'' என்று கூறியபடியே உள்ளே வந்தாள். பாரதி சந்தோஷமென்பதே அற்றப் பதுமையாக விருப்பினும் சந்தோஷத்தை வருவித்துக் கொண்டு "ஹா!

காமுவா! அடாடா! என்ன ஆச்சரியம்! உன்னை இன்று திடீரென்று பார்க்கும் பாக்கியம் கிடைக்குமென்று சொப்பனத்திலும் நினைக்கவில்லையே! வா; உட்காரு. எல்லோரும் சௌக்யமா!'' என்று விசாரித்தபடியே குழந்தையைக் கையில் வாங்கிக் கொண்டு கொஞ்சி முத்தமிட்டாள்.

இந்த நாடகங்களை எல்லாம் பார்த்த முத்தி "இவ யாரடியம்மா?'' என்று மெல்ல கேட்டாள். "பாட்டீ! இவளும் நானும் ஒன்றாகப் படித்து விளையாடினவர்கள். என் தாயாருக்கு தூரத்து பந்துக்கள் கூட ஆக வேண்டும் என்று கூறிவிட்டு காமுவை அழைத்துக் கொண்டு கூடத்திற்குச் சென்று விட்டாள். தான் இன்னும் சாப்பிடாமையினால் தனக்கென்று வைத்துள்ள ஆகாரம் உள்ளே இருந்தது. முதலில் காமுவின் களைப்பைத் தீர்த்துவிட்டு இவள் வரலாற்றைக் கேட்போம் என்று நினைத்து முதலில் அவளை உட்காரவைத்து சாப்பாட்டைப் போட்டாள்.

அந்தோ பாவம்...காமு சாப்பாட்டைக் கண்ணால் கண்டு எத்தனை நாட்களாயிற்று. அவளுடைய நிலைமையே காய்ந்து வரட்சியாகிவிட்டதென்றால் வயிற்றுக்குக் கேட்க வேண்டுமா? சாப்பாட்டை நிதி கண்டது போலத் தின்று ஒரு செம்பு தண்ணீர் குடித்தாள். அப்படியே களைத்துப் போய் படுத்து விட்டாள். எஞ்சிய சிறிது ஆகாரத்தைப் பாரதி சாப்பிட்டு விட்டு மோர் உரை குத்துவதற்காகக் கிழவி வைத்திருந்த பாலில் தண்ணீரை ஊற்றிக் குழந்தைக்கு இரண்டு சங்கு போட்டி விட்டு மிச்சத்தை உரை குத்தி விட்டாள்.

பிறகு காமுவை நோக்கி அன்போடு "அம்மா! உனக்கு நம் தாய்ப் பாஷையைத் தவிர வேறு ஏதேனும் பாஷை தெரியுமா! இங்கு லங்கிணி போல வீற்றிருக்கும் கிழத்திற்குத் தெரியாமல் பேச வேண்டும். அதற்காகக் கேட்கிறேன்'' என்றாள்.

காமு:—அம்மா! ஆங்கில பாஷை கொஞ்சம் வரும்—என்று ஆங்கிலத்திலேயே கூறினாள்.

பாரதி :—அப்படியா! அந்த பாஷையில் எனக்கும் சிறிது பரிச்சய முண்டு. ஆதலால் அதிலேயே உன் வரலாற்றினைக் கூறம்மா! எனக்கு முன் பின் தெரியாவிடினும் உன்னைப் பார்த்தால் என் மனத்தில் ஏதோ பரிதாபம் வேலை செய்கிறது. நான் தான் ஒரு அபாக்யவதி என்றால் என்னைப் போல நீயும் ஒருத்தி இருக்கிறாயே என்று மன வருத்தமாக விருக்கிறது. நான் ஓர் பெரிய காவல் சிறையில் இருப்பதால் எச்சமயம் என்ன விபத்து வருமோ! சீக்கிரம் உன் வரலாற்றைச் சொல்லி விடு—என்று ஆங்கிலத்திலேயே கூறினாள்.

காமு :—(கண்ணீர் பெருகியவாறு பாரதியின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு) சகோதரீ! முன் பின்னறியாத எனக்கு இத்தகைய பச்சாத்தாபத்துடன் உணவளித்து உதவி புரியும் நீ என்னுடைய கேவலமான வெட்கக்கேடான சரிதையைக் கேட்டால் கை கொட்டி நகைத்துக் காரியுமிழ்ந்து "ஐயோ! இத்தகைய பாவிக்கு நாம் ஏன் ஆதரவு கொடுத்தோம்" என்று கண் கலங்கித் தவிப்பாய் என்பதை நான் முதலிலேயே கூறி விடுகிறேன். சகோதரீ! (தன் சரித்திரத்தைத் தான் ராஜனின் வீட்டில் திட்டு வாங்கியது வரையில் ஆதியோடந்தம் கூறி) அம்மணீ! அந்த புண்ணியவான் யாரோ! அந்த மகானுபவன் மனத்தீரத்தையும் கருணைக் குணத்தையும் என்னென்று கூறுவேன்?

அம்மணீ! இப்பாவியை ஆதரித்ததின் பொருட்டு அந்த அஞ்சாத வீரனுக்குற்ற ஆபத்தை என்னால் கூறவே—என்னால் தாங்கவே—முடியவில்லை. சில தினங்கள் அம் மகா புருடனின் ஆதரவிலிருந்தும் அந்த தியாகமூர்த்தியின் ஊரோ, பெயரோ எங்கு இருக்கிறார் என்ற விவரமோ ஒன்றுமே எனக்குத் தெரியாது. நான் கேட்கவும் சமயம் கிடைக்கவில்லை. என்னைக் காப்பாற்றிய பெரிய குற்றத்திற்காக அவருக்குக் கிடைத்த திட்டுகளும் அவதூறுகளும் போதாமல் அவர் என்னைக் கள்ளத்தனமாக வைத்திருப்பதாயும், குழந்தை பிறந்து விட்டதாயும் அபாண்ட பழியைப் போட்டு விட்டார்கள்.

என் போதாக் காலக் கொடுமையின் பயனால் எனக்கு உதவி புரிந்த உத்தமருக்கு இத்தகைய அனியாயப் பழி விதிப்பதை என்

ணல் சகிக்க முடியாது தவித்தேன். அவருடைய பாட்டனார் கால மாகி விட்டார். அந்த சவத்தை எடுக்க ஒருவரும் வராமல் கட்டுப் போட்டதோடு அந்த சுத்த வீரனை நிரபராதியை மனந் துணிந்து ப்ராயச்சித்தம் செய்து கொள்ளும்படிக்கு நிர்ப்பந்தித்துக் கூறி னார்கள்.

அந்த தீர புருஷன் அதை ஒரேயடியாக மறுத்ததோடு அனேக நீதிகளை முறையிட்டார். செவிடன் காதில் ஊதிய சங்க நாதம் போலப் பயனற்றதாகி விட்டது. பார்த்தேன். மகா கொடும் பாவியாகிய என்னொரு உயிரையும் இச் சிசுவின் உயிரையும் காத்த கருணை மூர்த்திக்கு இத்தகைய தண்டனைகளா! இத்தனை கடின வார்த்தைகளா!......சிச்சீ! இப் பாழும் கட்டையினால் உபகாரம் எள்ளளவும் இல்லை எனினும் உபத்திரமாவது இல்லாமலிருக்கக் கூடாதா? வேண்டாம். நம்மால் பிறருக்குத் துன்பம் வேண்டாம். என் பாவிப் பிறப்பை ஒழித்து விடலாம்.'' என்றெல்லாம் தீர்மா னித்தேன்.

சகோதரீ! என்னுடைய பிழைப்பின் கேவலம் உலகமளந்த உத்தமன் அறிந்ததாயினும் இம் மக்கள் வாய் கூசாது சொல்லும் வார்த்தையைக் கேட்டுச் சகிக்க முடியவில்லை. நானே எழுந்து சென்று உண்மையைக் கூறலாம் என்றாலோ அதையும் கட்டுப்பா டாகக் கூறும் கதை என்று தான் புறக்கணிப்பார்கள். ஆதலால் நான் அதற்குமேல் அங்கு நிற்காமல் உடனே அகன்றுவிட எண்ணி னேன்.

அதே சமயம் அந்த உத்தம புருஷருடைய மாமன் மனைவியும் அந்தம்மாளின் சகோதரியும் என் முன்னால் வந்து கண்டபடி திட்டி, சாணியைக் கரைத்து என்மேல் கொட்டி, துடைப்பத்தால் அடித்துத் துரத்தினார்கள். எம்மா! போதுமா! இப் பாவிக்கு மரியாதைகள்... ஆம்...ஆம்...போதாது. இன்னுங்கூட வேண்டும் என்று நானே சொல்வேன்.

அந்த மகானுபாவன் வருவாரோ என்று எதிர்பார்த்தேன். அவரைக் காணவில்லை. பிறகு நானே இச் சிசுவைத் தூக்கிக்

கொண்டு என்னால் எத்தனை வேகமாக நடக்க முடியுமோ அத்தனை வேகமாக நடந்துவிட்டேன். மார்பு தடதடவென்று அடித்துக் கொண்டது. கால்கள் தள்ளாடித் துவண்டுவிட்டன. நான் போகும் வேகத்தைக் கண்டு யாரேனும் என்னை வித்யாசமாக நினைத்துவிடப் போகிறார்களே என்ற பயமும் பாதித்தது.

திருப்பதி யாத்திரீகர்கள் சுமார் 40—50 பெயர்கள் "கோவிந்தா! கோவிந்தா!" என்று பகவன்னாமத்தை ஜபித்துக் கொண்டு கும்பலாகச் சென்றார்கள். அவர்களைப் பார்த்ததும் எனக்குச் சற்று தெம்பு உண்டாயிற்று. நானும் அக் கூட்டத்தில் ஒருத்தியாகக் கலந்துகொண்டு அவர்களோடு கூடவே "கோவிந்தா! கோவிந்தா! வெங்கடேசப் பெருமாளுக்கு கோவிந்தா! கோவிந்தா" என்று கூவியவாறு சென்றேன்.

எந்த திசையில் அவர்கள் செல்கிறார்கள் என்றதையே நான் அறிய விரும்பவில்லை. என் தாயார் என்ன கதியானாளோ வென்பதும் அறிய முடியவில்லை. பிறரை விசாரிக்கலா மென்றால் என் வெட்கக் கேடான விஷயத்தைக் கூறவேண்டும். அதுவும் அவமானமாக விருந் தது. அதோடு நான் என் குழந்தையைக் கொல்லாது வைத்திருப் பதை என் தாயார் அறிந்தால் வருந்துவாள் ஜாதிக்கும் சமூகத்திற் கும் பயந்து என்னைத் திட்டுவாள். அதனால்தான் அவள் கொலைக் கும் துணிந்தது என்பதை நானறிவேன்; ஆதலால் அவள் விதிப்படி அவள் கதியாகட்டும்; என் விதிப்படி என் முடிவு ஆகட்டும் என்று எண்ணிப் பேசாது நடந்துவிட்டேன்.

அவர்கள் என்னை யாரு, என்னவென்று கேட்டதற்கு நான் பிச்சைக்காரி, பரதேசி, திக்கற்றவள் என்று பொருத்தமாகப் புளுகி விட்டேன். அதை யவர்கள் உண்மை என்று நம்பிப் பேசாதிருந்து விட்டார்கள். குழந்தையை மாற்றி மாற்றி எடுத்துக் கொஞ்சிக் கொண்டே அவர்கள் சென்றதால் அந்த வகையிலும் எனக்கு உதவி புரிந்தார்கள்.

அவர்கள் ஒரு சத்திரத்தில் ஒரு நாள் தங்குவது,மீண்டும் ஒரு நாள் நடப்பது, ஒரு நாள் வேறு ஊர் சத்திரத்தில் தங்குவது இப்ப

டியே செல்கிருர்கள். அவர்களோடு கூடவே சுமார் 4—5 தினங்கள் கழித்தேன். பெரிய !துணையாக அவர்கள் சேர்ந்ததால் அவர்கள் சாப்பிடும் ஆகாரத்தில் எனக்கும் கொஞ்சம் கொடுத்து வந்தார்கள். என்னுடைய பாப வாழ்க்கையிலும் அது சற்று ஆறுதலாக விருந்தது.

பிறகு அவர்கள் சென்ற ஒரு ஊரின் பெயரை அகஸ்மாத்தாக நான் அறியும்போது அப்பாழும் ஊருக்கு அடுத்தாற்போலத் தான் வாழ்ந்த ஊர் என்பதை யறிந்தேன். என்னைத் தூக்கி வாரிப் போட்டது.

நான் அவர்களிடம் சொல்லிக்கொண்டு கால் போன பாதை எல்லாம் நடந்தேன். இரண்டு நாட்கள் எங்கெங்கேயோ சுற்றி யலேந்து ஒரு வாய்க் கஞ்சியும் இன்றி பஞ்சையாகப் பறந்து நடக்க நாடியற்றுவிட்டேன். சீ! பிள்ளேயுமாயிற்று. பாசமும் மாயிற்று. இப்பாழும் குழந்தையின் ஆசைக்காகத் தானே மானமும் போய், கவுரவமும் போய் நடைப் பிணம் போல இப்படி யலேகின்ருேம். சீ...இனி இம்மாதிரியான வ்ாழ்க்கை வேண்டாம். இந்த சனியனே யும் குளத்தில் எறிந்துவிட்டு நானும் விழுந்துவிடுவது என்று துணிந்தேன்.

ஆனுல் அடுத்த விஞடி மீண்டும் பாசமும், இப் பச்சை மண்ணின் குற்றமற்ற நிரபராதியான தோற்றமும் என்னைத் தடுத்தது. குழம்பிப் போய்விட்டேன். வெகு நேரம் புலம்பினேன்...சீ...நான் பண்ணியுள்ள பாவங்களோ, மலே போன்றதாக விருக்கின்றன.அவைகளே எல்லாம் அனுபவிக்காமல் இன்னும் தற்கொலே, சிசுஹத்தி இரண்டும் செய்து மூட்டை கட்டவேண்டுமா! நான் செய்த பாபத்திற்கு இங்கேயே தண்டனே யடைந்து அனுபவித்துவிட்டுச் சாக வேண்டும் என்ற ஓர் வைராக்கிய எண்ணம் உண்டாயிற்று.

அதோடு சாகும் ஆசையை விட்டு விட்டு மீண்டும் நடக்க வாரம்பித்தேன். இன்று இச் சிற்றூரை யடைந்ததும் என் மயக்கமும் மாரடைப்பும் என்னே யறியாமல் வந்தது. நான் குழந்தையுடன் ஐயோ! ஐயோ! என்று கத்திக்கொண்டே கீழே விழுந்துவிட்டேன்.

அதுதான் எனக்குத் தெரியும். அம்மணி! போதுமா இப்பாவியின் சரிதை?'' என்று கூறிக்கொண்டே கண்ணீரை ஆருய் வடித்தாள்.

இதுபரியந்தம் கண் கலங்கியபடியே கேட்டுக் கொண்டிருந்த பாரதியின் மனத்தை இந்த பயங்கர சரிதையானது அப்படியே உலுப்பிவிட்டது. ஐயோ! இப்படியும் அக்ரமங்கள் நடக்குமா! குற்ற மற்ற ஒரு பெண்ணை பாவி, சண்டாளன் இத்தகைய ஆபத்திற்கு இலக்காக்கிவிட்டு த்ரோகம் செய்து மறைந்துவிடுவதுதானு ஆண்களின் லக்ஷணம்..என்ற பல கேள்விகள் அவள் மனத்தில் எழுந்து தாண்டவமாடின.

தான் இம்மாதிரியான விஷயங்களைக் கேட்டறியாத சிறுமியாயினும் அவள் படித்துள்ள பல கதை புத்தகங்களின் ஞாபகம் அவளுக்கு உண்டாகியது. கதையில்தான் இத்தனை அனியாயங்கள் நடக்கிறதென்ருல் நேரில் கதைகளைத் தோற்கடிக்கும் அக்ரமங்கள் நடக்கின்றனவே; ஐயோ! பாவம். நம்பி மோசம் போய்விட்டாள்.'' என்று தனக்குள் விசனிக்கின்ருள். இந்த விஷயம் வெளியாருக்குத் தெரிந்தால் இதை யோர் பெரிய தூணுக்கிப் படுத்தாத பாடு படச் செய்துவிடுவார்களே!

அந்தோ! இந்த தாடகா வனத்து அரசி வந்துவிட்டால் நாம் என்ன பதில் பேசுவது என்றது போன்ற குழப்பங்கள் எல்லாம் உண்டாகிவிட்டன. எனினும் அவள் கண்ணீர் பெருகியவாறு காமுவை நோக்கி "அம்மா! நான் இன்னேரம் கேட்ட விஷயங்கள் எல்லாம் கதை படிப்பதாக எண்ணினேனேயன்றி உண்மையிலும் இப்படி நடக்குமா என்று ஆச்சரியப்படுகிறேன். நீ யொரு விதத்தில் அனுதை; நான் ஒரு விதத்தில் அனுதை. நீ நம்பிக்கை மோசம் செய்யப்பட்டு இக் கதியானுல் நான் (சரித்திரத்தைக் கூறி) இம்மாதிரி என் கன்ம வினையினுல் பரதேசியானேன்.

காமு! நாம் ஆங்கிலத்தில் பேச வாரம்பித்தது முதல் இக் கிழட்டுப் பிணம் நம்மையே கவனிப்பதோடு "என்னடீ! தஸ் புஸ் எண்ணு பேசறங்கோ!'' என்று பல தரம் கேட்கிறது. இந்த வீட்டு ராக்ஷஸி வந்துவிட்டால் சரியாக நடித்து உன்னைக் காட்டிக்

கொடுக்காமலிருக்கும் வகையைச் செய்யவேண்டும். நானே பராதீனத்திலிருக்கிறேன். நீ என்ன செய்யப் போவதாக உத்தேசம். உன் குழந்தையையும் வளர்த்து நீயும் பிழைக்க வேண்டுமே! அதற்கோர் ஆதாரம் வேண்டாமா! உன் உத்தேசந்தான் என்ன? உன் சரித்திரம் புத்தி பிசகால் வஞ்சக வலையில் விழுந்து பாழாகிவிட்டது என்றாலும் இதைக் கேட்ட பிறர் பெருங் குற்றமாக வன்றோ கூறுவார்கள். உன்னைக் காப்பாற்றினர் என்றுயே அவ்வீட்டில் பட்ட பாட்டைப் பார்த்தாயா! ஓர் சிங்கத்தின் கதியே இப்படியாய்விட்டதென்றால் கேவலம் அடிமை வாழ்வில் உயிர் வாழும் என் கதி எப்படியாகும் பாரு.

அம்மா! எனக்கு எந்த விதம் உனக்குச் சகாயம் செய்வதென்று தெரியவில்லையே! மனம் என்னவோ பதறுகிறது. என்னை மீறிய ஆத்திரத்துடன் வேலை செய்கிறது. ஆனால் நான் பரதேசி... திக்கற்றவள்...அடிமைத் தளையில் அவதிப் படும் பாவி...அரக்கி கையில் அவஸ்தைப் படும் துரதிருஷ்ட தேவதை...என்ன செய்வேன். நல்ல விஷயங்களானால் அவை பரவுவது அதிசயம். தீய காரியம் காற்று போலப் பரவிவிடுமே...நான் என்ன செய்வேன்... விடிந்ததும் கிழவி வந்துவிடுவாளே: அவளுக்கு எப்படி பதில் பேசுவது? இக் குழந்தையை விடுவதற்கு மனமோ வரவில்லை. என் தாயார் இருப்பின்...என்று கலங்கித் தவிக்கிறாள்.

உண்மையிலேயே அனுதாபத்துடன் கூறும் பாரதியின் நிலைமையைக் கண்டு காமுவின் இருதயம் துடித்தது...ஐயோ! பாவம். திக்கற்ற பரதேசி அவள் ஒண்டிக்கொண்டிருக்கும் இடத்தில் நான் உலை வைத்துவிடாமல் உடனே எப்படியாவது செல்லவேண்டும். அங்கொரு ஆளை ப்ரஷ்டனாக்கியது போதும். இங்கு ஒரு பெண்ணையும் வதைக்கவேண்டாம். நம் விதி நமக்கு உதவி புரிபவர்களையே தாக்கி யடிக்கின்றது......

அம்மா! பாரதி! நீ பரிசுத்தவதியா யிருந்தும் உனக்கும் ஈசன் இத்தகைய அவஸ்தைகளை யளித்திருக்கிறான். இது போதாமல் என் மூலம் வேறு உபத்திரவம் வேண்டாம். பொழுது விடிந்ததும் நான்

எங்கேயாவது தொலைந்து போய்விடுகிறேன். பயப்படாதே: உன் மனம் தவிக்கும் தவிப்பை நான் அறியாமலில்லை. அம்மா! அழாதே! நீ என்ன செய்வாய். நான் மகா பாவியாகையால் எனக்கு தங்குவதற்கும் ஈசன் இடங் கொடாது விரட்டி யடிக்கிறார்.'' என்று கூறிப் புலம்பினாள்.

இதைக் கேட்ட பாரதி காமுவை நோக்கி "அம்மா! நீ இன் னிலைமையில் இச் சிசுவை எடுத்துக்கொண்டு இத்தனை தூரம் நடந் ததே உன்னை மிகவும் கேவலமாக்கிவிட்டது. இப்போதே மீண்டும் எங்கே போவாய். ஐயோ! என்னை ஏதோ சித்திரவதை செய்கிறதே! நான் என்ன செய்வேன்...காமு...ஒன்று செய்யலாம். இப்போது நடித்த நடிப்பையே ஊர்ஜிதமாக்க எண்ணி நடித்துப் பார்க்கலாம். கிழவி பேசாதிருப்பாளாயின் இன்னும் சில தினங்களாவது நீ இங் கிருந்து உடம்பை சற்று தேற்றிக்கொண்டு போய்விடு...இதற்குள் தெரிந்துவிடுமாயின் விதி விட்ட வழியாகட்டும்'' என்றாள்.

காமுவுக்கு அம்மாதிரி செய்வது சரியல்லவென்று தோன்றிய தாயினும் அவளுடைய தேக நிலைமையை உத்தேசித்தும் தன்னால் ஓரடி கூட எடுத்து வைக்கமுடியாத நிலைமையை எண்ணி அதற்கிசைந் தாள். பிறகு தாம் நடிக்கவேண்டிய விஷயத்தைத் தீர்மானம் செய்து கொண்டார்கள். வெகு நேரமாகப் பேசிக் கொண்டிருந்ததால் பொழுது போவதே தெரியவில்லை.

கோழி கூவுகிறது.காக்காய் கத்துகிறது;புள்ளினங்களெல்லாம் இசை பாடுவதைக் கேட்டதும் பாரதி திடுக்கிட்டாள். "ஐயோ! பொழுது விடிந்துவிட்டதே! இனி தூங்குவதாவது. கிழவி வந்து விடுவாள். நான் என் விதியைத் தொலைக்க எழுந்திருக்கிறேன்.'' என்றாள். அதே சமயம் இடி இடிப்பது போன்ற சப்தத்துடன் நமது தாடகை வந்து கதவைத் தட்டினாள்.

முத்தி நன்றாகத் தூங்கிவிட்டாளாதலால் பாரதியே எழுந்து சென்று கதவைத் திறந்தாள். காமுவுக்கோ நடுக்கம் கூறத் திற மன்று. கிழவி வீதியிலேயே நின்று "ஏண்டீ தடி மரமே! இன்று வெள்

ளிக்கிழமை என்பதை மறந்துவிட்டாயா? அருணோதயமாகி 5 நாழி கையாயிற்று. இன்னும் வீதிக்கு சாணமிட்டுக் கோலம் போட வில்லை. வீடு மெழுகவில்லை. மூதேவி போன்று தூங்குகிருயே! சிச்சி! புத்தி கெட்ட நாயே'' என்று அதட்டியவாறு உள்ளே வந்தாள்.

அப்போது குழந்தை யழுதது கேட்டு "இதென்ன சின்ன குழந்தை இங்கு அழுகிறது...யாரது இங்கு படுத்திருப்பது... அடி...முத்தி! எழுந்திருடி! மூதேவி முண்டெ...என்று சுப்ரபாதம் பாடியபடியே காமுவருகில் வந்து பார்த்தாள்.

இதற்குள் பாரதி வெகு பணிவுடன் பேசத் தொடங்கி "பாட்டீ! இவள் நேற்றிரவு இங்கு வந்தாள். இவள் என்னுடன் படித்தவள். பக்கத்து வீட்டிலேயே இருந்து விளையாடியவள். என் தாயாருக்கு தூரத்து உறவினளும் ஆவள். இவளுக்கு என்னைப் பார்க்கவேண்டு மென்று ஆவலாக இருந்ததாம். யாரோ தகுந்த துணை யகப்பட்ட தால் உடனே புறப்பட்டு வந்தாள். என் தாயார் இறந்த துக்கம் விசாரிக்கவே வந்தாள்.'' என்று ஒருவிதமாகக் கூறினள்.

இதைக் கேட்ட கிழவி சிறி எழுந்து சதுராடியபடியே"ஓகோ! உன்னைப் பார்க்காமல் கண்கள் பூத்துவிட்டதோ! மெத்த சந்தோ ஷம். இத்தனை பச்சைக் குழந்தையைத் தூக்கிக்கொண்டு உன்னைப் பார்க்க கர்ம ச்ரத்தையுடன் வந்தாளா? பாவம்.'' என்று உருமிய படியே முகத்தை உற்று உற்று கவனித்தாள். அதற்குமேல் ஏதும் சொல்லாது அம்மட்டோடு நிறுத்திவிட்டு பாரதியை நோக்கி "அடி; இதோ உத்ஸவத்தில் கிடைத்த புஷ்பம் நிறைய கொண்டு வந்திருக்கி றேன். தலை பின்னிவிடுகிறேன் வா...காலை 10 மணிக்கெல்லாம் உன் னைப் பார்ப்பதற்கு பெரிய குளத்தார் வருவதாகச் சொல்லி இருக்கி ருர்கள். அதற்குள் வேலையை முடித்துக்கொள்ளு'' என்ருள்.

இவ்வித உபத்திரவம் தினம் பிடித்து வாட்டுவதால் பாரதிக்கு இதொன்றும் புதிதாகத் தோன்றவில்லை. விதியை எண் ணித் தலை பின்னிக்கொண்டாள்; மற்ற காரியங்களைச் செய்து முடித்தாள். காமுவுக்கோ இங்கிருப்பது முள்ளின் மேல் நிற்பது போல விருக்கிறது. என்ன செய்வாள் பாவம்!

மணி 10 அடித்ததும் இரண்டு மாட்டு வண்டி நிறைய மனிதர்கள் வந்து இறங்கினார்கள். வரிசைத் தட்டுகளும் அலங்காரப் பெண்களும் கலகல வென்று வந்து கூடத்து நிறைய உட்கார்ந்தார்கள். கிழவி அவர்களை வரவேற்று உபசரித்து தடபுடலாக மரியாதை செய்து "இவர்தான் எங்கள் மாப்பிள்ளையா! பேஷ்! இம்மாதிரியான ஷோக்கான மருமகப்பிள்ளை வேண்டுமென்றுதான் எங்கள் பிள்ளை உயிரோடிருந்த மட்டும் ஆசைப்பட்டுத் தவித்தான். அம்மாதிரிதான் நானும் பிரியப்படுகிறேன். பெண்ணும் இக்கால நாகரிக நங்கை யாதலால் கேட்கவேண்டாம்...மனத் திருப்தியா யிருக்கிறது. என்று கூறியபடி மாப்பிள்ளையை ஏற இறங்கப் பார்த்தாள்.

பிள்ளை வீட்டாரும் சந்தோஷத்துடன் "ஆமாம் பாட்டீ! இக்காலத்திற்கு ஏற்றது போல நாகரிகமும் படிப்பும் பாட்டும் நிறைந்திருந்தால்தான் நன்றாக இருக்கிறது. பையனும் அம்மாதிரியான பெண்ணையே தேடி யலைந்தான். அவனுடைய சந்தோஷப்படி பெண்கள் கிடைக்காமையினால்தான் இத்தனை நாட்களாக விவாகமாகவில்லை. உங்கள் பேத்தி வெகு அழகு! கெட்டிக்காரி என்று எல்லோரும் சொன்னார்கள். அதனால்தான் அவன் ஒரே பிடியாக இசைந்தான். நேற்று இரவு நீங்கள் கூறியபிறகு இரவே நாங்கள் முடிவு செய்துகொண்டோம். இன்று வெள்ளிக்கிழமை யாகையினால் இன்றே நிச்சயதார்த்தமும் செய்துவிடலாம் என்று தான் வரிசையோடு வந்தோம். பெண் எங்கே கூப்பிடுங்கள்." என்றார்கள்.

கிழவி வெகு சந்தோஷத்துடன் 'இதோ அழைக்கிறேன்' என்று கூறிக்கொண்டே பாரதீ! பாரதீ! என்று கூப்பிட்டாள். சமயல் பக்கமாக இருக்கும் சிறிய அறையில் படுத்திருந்த காமுவுக்கு இவர்கள் வந்ததும் பேசியதும் எல்லாம் கேட்டதால் மெல்ல எழுந்து கதவின் இடுக்கால் பார்த்தாள். அந்தோ! அவள் தலைமீது வானமே இடிந்து விழுந்துவிட்டதான அவஸ்தை உண்டாகிவிட்டது. ஆவேசமும் ஆத்திரமும் பொங்கிவிட்டன.

அதே சமயம் பாரதி கண்ணீர் பெருக அங்கு சென்று கிழவியின் ஆக்கினைப்படிக்கு எல்லோரையும் நமஸ்காரம் செய்துகொண்

டிருப்பதையும் கண்டாள். அதற்குமேல் காமுவால் தாங்க முடிய வில்லே. அவள் காளிகாதேவி போல அடித்துப் புடைத்துக்கொண்டு ஓடி வந்து அங்கு மருமகப்பிள்ளேயாக அட்டகாஸத்துடன் உட்கார்ந் திருக்கும்—இவளே மோசம் செய்த த்ரோகியான—பொன்னுசாமி யின் முன்பு வந்து "அடே சண்டாளா! அடே கிராதகா! நாசகாலா! உன் பசிவை பலதரம் ஆற்றியும் இன்னும் உன் திமிர் அடங்க வில்லேயா? இம்மாதிரி குடி கெடுக்கும் நீ சாகமாட்டாயா! ஐயையோ! என்னே செய்த சித்திரவதை போதாதென்று இங்கு ஒழுங்காக மண மகனுகவே நடிக்க வந்துவிட்டாயோ! அடே படுமோசக் கள்ளனே! படுபாவி மகனே! என் வயிறு எரிவதுபோல நீ எரியமாட்டாயா? இன் னுமா இதே அக்ரமத்தைச் செய்துகொண்டு உயிர் வாழுகிருய். ஐயோ! இந்த பரதேசியின் தலேயில் கொள்ளி வைக்க மனந்துணிந்து விட்டாயோ? இனி உன் எண்ணம் சாயாது. உன் மோசம் பலிக்காது.

பாரதீ! பாரதீ! நான் உன்னிடம் கூறிய படுபாவி.—என்னேக் கொலே செய்த சண்டாளன்—இவன்தான்...ஹா...கடவுள் நல்ல காலத்திற்குத்தான் என்னே இன்று இங்கு கொண்டு விட்டார்." என்று பெரிதாகச் சத்தமிட்டுக் கத்தி தலேயிலடித்துக் கொண்டாள். இந்த எதிர்பாராத பெரிய அதிர்ச்சியான சம்பவத்தைக் கண்டு அங் குள்ள எல்லோரும் வியப்பும், திகைப்பும், ஆச்சரியமும் அடைந்து விட்டார்கள். கொடி போன்று நின்ற பாரதி புழுவைப் போலத் துவண்டு பூமியில் சாய்ந்தாள்.

## 15-வது அதிகாரம்

### சிறைச்சாலையின் வைபவம்—நிரபராதிகளின் பரிபவம்

உலகத்தில் மக்களிடையே சகஜமாகத் தோன்றும் சில சாதாரண குணங்கள் அரசன் முதல் ஆண்டி வரையில், கனவான் முதல் கள்ளன் வரையில் உண்டாவது சகஜம். வீரச் செய்கைக்கும் வியப்பு; விகாரச் செய்கைக்கும் வியப்பு. நன்மைக்கும் ஆச்சரியம் தீமைக்கும் ஆச்சரியம்; வீடு அழகாகக் கட்டினாலும் ஆச்சரியம், வீடு பற்றி எரிந்தாலும் ஆச்சரியம். இப்படியாக பலவிதமான விஷயங்கள் சகஜமாகவிருப்பதுபோல சிறைச்சாலைக் கைதிகளும் தம்மைப் போன்று திருடியும், கொலை செய்தும், மோசம் செய்தும் நரசோரம் செய்தும் பலவகைப்பட்ட அபார காரியங்களைச் செய்துவிட்டு வந்தாலும் அவர்களைப் பார்த்தே மற்றவர்களுக்கு வியப்பு.

மேற்படியான எந்த துஷ்ட காரியங்களையும் செய்யாமல் புனிதமான பாரத நாட்டின் விடுதலைக்காக வேண்டி தியாகப் பதுமைகளாக—வீரப் பெண்மணிகளாக—வரும் ஸ்திரீ ரத்தினங்களைக் கண்டும் அந்த கைதிகளுக்கு வியப்பும் ஆச்சரியமும் உண்டாகிறது. தம்மைப் போலவே பக்கா வேலையில் கை தேர்ந்த கன்னியம்மாளைப் பார்த்த உடனேயே இங்குள்ள அத்தனை கைதிகளுக்கும் சொல்லத் திறமற்ற ஆச்சரியம் ஒரு புறம்; சிலருக்கு அடங்காத சந்தோஷம் ஒரு புறம்.

“அடீ! இவ மூஞ்சியே பாத்தியாடீ! பக்கா பேர்வழியாக்கிராயப்பா! நம்பளெவுட கெட்டிக்காரி யாரே எப்படி கொலை பண்ணிப்புட்டாளோ தெரியலே” என்று வியப்புறுவதில் என்ன அதிசயமிருக்கிறது. இவர்கள் முதல் முதல் ஜெயிலுக்கு வந்தவுடனே இவர்களுக்கு முன்னால் அனுபவப்பட்டுத் தேறியவர்களெல்லாம் இவர்களைப் பார்த்துப் பரிகசித்ததை மறந்துவிட்டார்கள். இப்போது

இக் கைதிகள் கன்னியம்மாளையும், விசாலத்தையும் வளைத்துக் கொண்டு "ஏண்டியம்மா! யாரே கொண்ணுப்பிட்டிங்கோ!" என்று குசலப்ரசனம் செய்தார்கள்.

அங்குள்ள கூட்டத்தில் ஒருத்தி கன்னியைப் பார்த்ததும் "யக்காடீ; நீயா வந்துட்டே! மாமன் வரதன் எப்படிக்கிரான் யக்கா! என்ன செஞ்சுப்புட்டெ......நாம் ரெண்டு பேரும் நல்ல சினேகித காரு அல்ல. அதான் இங்கிச்சும் ஒண்ணு இருக்க தொணைக்கு வந்துட்டெ: பேஷ்." என்று ப்ரம்மாநந்தத்தில் மிதப்பவள் போலச் சிரிக்கிருள்; சந்தோஷப்படுகிருள்.

நிரபராதிகளாக இருந்தும் சாக்ஷிகளின் கொடுமையினல், பக்க பலமின்மையால், எதிரிகளின் ஜோடிப்பால் படாப் பழி ஏற்றுச் சிறைச்சாலையில் உள்ள சிலருக்கு இந்த சிரிப்பும் பேச்சும் கர்ண கடூரமாயும் தாங்கமாட்டாத அவமானமாயும் இருக்கிறது. "ஐயோ! உங்கள் பவிஷுக்குக் குலாவலும் வேண்டுமா!" என்று வருந்துகிருர்கள்.

அதே சமயம் வீரக் களை முகத்தில் ஜொலிக்கப் புன் முறுவல் பூத்தவாறு, துல்லியமான கதர் உடை தரித்து குங்குமப் பொட்டணிந்து கும்பலாக அப்போதுதான் ஜெயிலுக்கு வரும் தேச சேவிகைகளின் கொண்டாட்டமும் ஆர்ப்பாட்டமும் அவர்களை மற்ற தேச சேவிகைகள் கொண்டாட்டத்துடன் எதிர் சென்று அழைத்துக்கட்டி யணைவதும் பேராநந்தக் காட்சியாக இருக்கிறது.

இதைக் கண்ட அந்த நிரபராதிக் கைதிகள் "ஐயோ! மகா ராஜிகள். இவங்களெ போல ஜெயிலுக்கு வந்தா என்ன நல்லா இருக்கும். எத்தனை பெருமை உண்டு. பாயாப்போன திருடும் கொலையும் செஞ்சுப்புட்டு வந்த கழுதைங்களுக்கு கொலாவல் வேரெயா? என்று வெறுத்துச் சென்றுர்கள். கன்னியோ திருகத் திருகவிழிக்கிருள்.

விசாலமோ, ஒன்றுமே தோன்ருமல் இந்தக் கூட்டங்களையும்

இவர்களின் பிதற்றல்களையும் கண்டு ப்ரமித்துப் போய்விட்டாள். தன் வீட்டிற்கு வந்த வீராயியை தான் கொல்லவே இல்லை என்பது அவள் மனத்திற்கு நன்ருகத் தெரியுமாதலால் இப்படியோர் படாப் பழி வருவதற்குக் காரணம் தான் ஒரு சிசுவைக் கொலை செய்யச் சொல்லிய பாவமே யாகும் என்று எண்ணிக் கண்ணீர் விடுகிருள்.

என் மகள் என்ன கதி யாளுளோ! குழந்தையின் முடிவு யாதா யிற்ருே ஒன்றுமே தெரியவில்லையே! ஈசா! இதென்ன சோதனை காலம்...ஹா...ஆதி முதல் நான் படாத கஷ்டங்களை எல்லாம் பட்டு மலம் ஜலம் முதல் வாரி, அடியும் உதையும் பட்டு அடிமை போல உழைத்து அரை வயிறு கஞ்சிக்கு அலைந்ததெல்லாம் அந்த ஒரு பெண்ணுக்காக வன்ருே! அந்தோ! அந்தப் பெண்ணு லேயே எனக்கு இப்படி கேவலமான கொலைக் குற்றத்தின் பட்டமும் வந்து இத்தனை கொலைகாரிகள், திருடிகள், மத்தியில் நானும் இருக்க விதி யமைந்தது.

ஹா! காமாக்ஷித் தாயே! உன்னையே நம்பி உன் ஞமத்தையே சூட்டி உன்னுடைய த்யானமாகவே இருந்த எனக்கு உன் மனம் வந்து அளித்த பரிசுகள் இவைதாளு! இப்படித்தான் உன்னை நம்பிய வர்களுக்கு நீ நன்மை காட்டாது தீமை செய்வதா...காமு...என்ன மதிமோசம் போய்விட்டேன். தலைவிதியால் கெட்டது கெட்டது. அக் குழந்தையை அனியாயமாக ஏன் நான் கொல்லத் துணிய வேண்டும். அதை தீரமான எண்ணத்துடன் வைத்திருக்கும் நோக் கத்தி லிருந்தால் இந்த பழியும் இதைவிடப் பெரிய அவமானமும் என்று மழியாத அபவாதமும் நான் அடைந்திருக்க வேண்டா மன்ருே. விதி. விதி. விதி யாரை விட்டது?'' என்று தன்போக்காகக் கண்ணீர் விட்டுக் கதறியபடியே படுத்துவிட்டாள்.

கன்னியம்மாளோ கொம்மாள மடித்துப் பேசுகிருள். எல்லோ ரையும் விசாரிக்கின்ருள். அங்கும் அட்டகாஸம் செய்யத் தொடங்கி விட்டார்கள். இன் னிலைமையில் வார்டர்கள் மற்ற கூட்டத்தை விலக்கி இவர்களுக்குக் காவலிருந்தார்கள். விசாலாக்ஷியை வாக்கு

மூலங் கேட்டதற்குத் தனக்குத் தெரிந்தவரையில் உண்மையை அப்படியே உரைத்துவிட்டாள்.

கன்னியம்மாளேக் கேட்டதில் கன்னியும் நாம் முன்னதிகாரத்தில் தெரிவித்தபடியே பொய்யும் பித்தலாட்டமும் கதை கட்டிக் கூறிவிட்டாள். அதிகாரிகள் காமுவைத் தேடுவதிலேயே நாட்டமாக விருப்பதால் இவர்களுடைய வழக்கைத் தள்ளி வைத்திருந்தனர்.

காமுவைப் பிடித்துத் தருகிறவர்களுக்கு ஆயிரம் ரூபாய் இனும் என்று அதிகாரிகள் விளம்பரம் செய்திருந்தபடியால் பணத்திற்கு ஆசைப்பட்டுக்கொண்டு இந்த உத்யோகத்திலும் வேட்டையாடுவதற்கு அனேகர் ஆயத்தமாகி விட்டார்கள். இவர்கள் விளம்பரம் செய்த மறு தினத்திலிருந்து அனேகர் அனேக பெண்களேப் பிடித்து மிரட்டி உருட்டி இழுத்துக்கொண்டு போலீஸாரிடம் காட்டுவது. அப் பெண்களே விசாரணே செய்தபிறகு சரியான தகவல் கிடைக்காமையினுல் அவர்களே யனுப்பிவிடுகிறது. இப்படியே லீலேகள் பற்பல நடக்க வாரம்பித்தன.

சில பெண்கள் வேண்டுமென்று தங்களே ஒளிப்பதாக எண்ணி விசாலத்தின் முன்பு கொண்டு நிறுத்தி "இவள் உன் மகள்தானு!" என்று கேட்டு அவள் இல்லே என்ருல் சந்தேகந் தெளிந்துகொண்டு செல்வது. தன் பெண் மகா மானவதி யாகையினுல் இத்தனே நாளேக்குள் எங்கேயோ விழுந்து இறந்திருப்பா ளென்று விசாலத்திற்குத் தோன்றிவிட்டது. "ஐயோ இனி என் செய்வேன்?" என்று புலம்பித் தவிக்கின்ருள் பாவம்.

தேசத்திற்காக சிறைச்சாலேக்கு வந்திருக்கும் பெண்மணிகளின் சந்தோஷத்தையும், களியாட்டத்தையும் அவர்கள் தமாஷாகப் பாடுவதும், போட்டி யிட்டு பந்தய ஓட்டம் பிடிப்பதும், கும்மி யடித்தும், கீதங்கள் பாடிக் களிப்பதும், கும்பல் கும்பலாக அழகிய பசேலென்ற புல் தரையின் மீது உட்கார்ந்து புத்தகங்கள், பத்திரிகைகள் படிப்பதும் உல்லாசமாகப் பேசிக் கைகோர்த்துலாவுவதையும், விதவிதமாகக் காய்கறிகளும், பலகாரங்களும் செய்து சாப்பிடுவதும் அவர்களுடைய மக்கள் மனிதர்கள் அவர்களேப் பார்க்க வரும் சந்தோஷத்தில் அவர்கள் சென்று பார்ப்பதும் அவர்களுக்குக் கொடுத்த பழ வகைகளேயும் இதர சாமான்களேயும் அவர்களுக்குள்

ஒருவருக்கொருவர் காட்டி மகிழ்வதும், அவர்கள் தையல் வேலை, நூல் வேலை, ராட்டில் நூற்பது முதலிய பலவிதமான உல்லாசக் களியாட்டங்களைக் காணக் காண விசாலத்தின் இருதயத்தில் ஆசை விசாலமாகப் பெருகி ஏக்கம் பொங்க வாரம்பித்தது.

"அந்தோ! ஊர் முற்றும் முழங்கிய இப் புனிதமான தேசத் தொண்டில் அந்தப் பெண்ணையும் ஈடுபடுத்தி நானும் ஈடு பட்டிருந்தால் இவர்கள் பெறும் பெருமையை நானும் பெற்றிருப்பேனல்லவா! இவர்களைப்போல நானும் சந்தோஷமாயும் சுயமரியாதையுடனும் இருக்கலா மல்லவா!...ஹா...வார்டர்களும் தலைவிகளும் அவர்களை என்ன மரியாதையாக நடத்துகிறார்கள். இந்தப் பாழும் கைதிகளை எத்தனை அலக்ஷியமாயும், எத்தனை உதாசீன வார்த்தைகளுடனும் நடத்துகிறார்கள்.

உம். அது அவர்கள் மேல் தவறில்லை. அவரவருக்குள்ள மரியாதைக்கன்றோ மரியாதை செய்வார்கள். யோக்யனை "ஐயா! வாருங்கள்" என்றும், அயோக்யனை திரும்பிப்பாராமலும், அப்படிப் பார்த்தாலும் "ஏண்டா! என்ன செய்தீ?" என்றும் பேச்சளவிலேயே எத்தனையோ வித்யாசமாக நடத்தவில்லையா! அப்படிக்கிருக்க மகா பரிசுத்தைகள் தேச விடுதலையின் பொருட்டு தன்னலப் பற்றற்ற தியாகத்தைச் செய்து அளவிலாத பெருமையோடு வந்திருக்கும் இந்த உத்தமிகளுக்கும்...கேவலம்...அஞ்சா நெஞ்சத்துடன்...நாவினால் சொல்வதற்கும் கூசும்படியான கொலை திருடு மோசம் முதலிய அடாத காரியங்களைச் செய்த மகா கொடிய கிராதகிகளுக்கும் அடாடா! எத்தனை வித்யாசம். மலைக்கும் மடுவுக்கு மன்றோ:...யானைக்கும் பூனைக்கு மன்றோ இருக்கின்றது!

சீச்சீ! இப் பாதகப் பெயர் பெற்று...மானங் கெட்டு—பூச்சிக்கும் புழுவுக்கும் ஒத்து, வாழ்வதை விடப் பிராணனை மாய்ப்பது எத்தனையோ மேலன்றோ! ஹா! என்ன பாபத்தைச் செய்து இத்தனை துன்பமனுபவித்தேனோ அது போதாதென்று இந்த ஜென்மத்தில் என் மனமறிந்து பாபமென்று தெரிந்து துணிபுடன் ஒரு பச்சைக் குழந்தையைக் கொலை செய்யச் சொன்ன இப் பாபத்தை நான் அனுபவிக்காமல் சாவது முடியுமா!" என்று பலவிதமான சிந்தனையுடன் உடைந்த மனத்தோடு துவண்டுப் போய்விட்டாள் விசாலம்.

அங்குள்ள மற்ற கைதிகள் எல்லாம் தங்கள் வருத்தம் ஒரு சிறிதும் கவனியாமல் "நீ எப்படி திருடினாய்? நீ எப்படி கொலை செய்தாய்? நீ யாரை மோசம் செய்தாய்?" என்று வெகு கனிகரத்துடனும் ஊக்கத்துடனும் விசாரிக்கும் விஷயம் விசாலத்தின் காதில் நாராசம் காய்ச்சி ஊற்றுவது போலவிருக்கிறது. பதில் பேசவும் பிடிக்காது திரும்பிக்கொண்டாள்.

இதைக் கண்ட மற்றைய கைதிகள் பரிகஸித்து எளனஞ் செய்து நகைத்தவாறு "ஐயோ பாவம்! இவ ராசாத்தியாக்கும். இவ காந்திக்காரி யாக்கும். இவளும் ஒரு கொலெ பண்ணிப்புட்ட கயுதெ தாங்கறத்தெ மறந்துப் பூட்டாளாங்காட்டியும். மின்னே ஒரு ஜோக்குகாரி நர்மதா இருந்தாளே! பலே வேதாந்தம் பேசுவாளே! அந்த மாதிரி இவளும் நாட்டியம் ஆட்ராளோ பாவம்.

அவண்ணூலும் சின்ன பொண்ணு. பாவம் கொலெ பண்ணு மெயெ பழி போட்டுகிணு வந்தா. புருசன் மேலே கொண்ட பச்சத் துக்காவ அவளும் ஜெயிலுக்கு வந்தா! இந்தம்மா கன்னியம்மாளுடன் கூட இருக்கச்செயெ தெரியாதா! உளுமெயா செஞ்சித் தான் இருப்பா! பலே காரியக்காரியாக்கிராளே!" என்று கூறிப் பின்னும் விசாலத்தை நோக்கி "ஏ! இதோ பாரு. யாரெயோ கொண்ணுப்புட்டாயாமே...நானும் அந்தமாதிரி நாத்தனரெ கொண்ணுப் புட்டுதான் இங்கு வந்துட்டேன். போயேன். இதிலே மூஞ்சியெ திருப்பலென்ன. சொல்லுடீ!...என்று பழகியவளைப் போலவே தடபுடலாகப் பேசிக் கேட்க வாரம்பித்தாள் ஒருத்தி.

எரிகிற கொள்ளியில் எண்ணெயை ஊற்றுவது போல இது விசாலத்தின் இருதயத்தில் அபாரமான வேதனையை உண்டாக்கி முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த விசனத்தையும் சகிக்கக்கூடாத கலக்கத்தையும் உண்டாக்கியது. "இப்படியும் அஞ்சாது கொலை செய்துவிட்டு அதை வாய் விட்டு ஜம்பமாகச் சொல்லிக்கொள்ளவும் மனம் எப்படி துணிகிறதோ தெரியவில்லையே!" என்று வியப்புங் கொண்டாள்.

182975

(அறிப்பு) நர்மதாவின் அபூர்வமான தியாக புத்தியையும், உத்தம லக்ஷணங்களையும், காதலின் வலிமையையும் நீங்கள் அறியவேண்டுமாயின் காதலின் கனி என்ற அதி யற்புதமான துப்பறியும் நாவலை உடனே வாங்கிப் படியுங்கள். காதலின் கனி என்ற பெயருக்கு மிகவும் பொருத்தமாக கனிந்த காதலர்களின் அருமையும், அடங்காப் பிடாரியும் காசாசைப் பேய் பிடித் தலைபவளுமாகிய அங்கச்சியம்மாளின் அட்டகாஸங்களும், வேடன் கையிலகப்பட்ட மாடப் புறாவைப் போன்று அவஸ்தைப்படும் திலகவதியின் அதி யற்புதமான போக்கும் படிக்கப் படிக்கத் தெவிட்டாத தெள்ளமுதம் போன்று ருசிக்கும். விலை ரூபா 2—8—0 தான். உடனே முந்துங்கள். இரண்டாவது பதிப்பு அச்சாகிக்கொண்டு வருகிறது. கூடிய விரைவில் வெளியாகிவிடும்.)

PRINTED AT TATA PRESS, & PUBLISHED BY V. M. PARTHASARATHY, MADRAS

# தி யுனைடெட் இந்தியா

## லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ் : மதராஸ்.)  (1906-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

டிரஸ்டி—சென்னை அபீஷியல் டிரஸ்டி.

**2½ கோடி ரூபாய்களுக்கு அதிகமான பாலிஸிகள்.**
**60 லக்ஷத்திற்கும் அதிகமாகவே ஆஸ்தி.**
**14 லக்ஷத்திற்கும் மேலாகவே**
**வருட வருமானம்.**

இக்கம்பெனிக்கு உண்டான விசேஷ லக்ஷணங்கள் பலவற்றுள் ஒரு சில :—

இக்கம்பெனியின் நிதி பூரண நம்பிக்கையுள்ள வகையிலிருக்கிறது.

இது ஜரூராகவும், பக்ஷபாத மின்றியும் பாத்யஸ்தர்களுக்குப் பணம் கொடுக்கிறது.

இதில் சிக்கனமான நிர்வாகம் நடக்கிறது.

மட்டான சந்தா, அவைகளுடன் கூடி திருப்திகரமான போனஸ் பணம்.

பாலிஸிதாரர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் சித்தமாகவும், வெகு திறமையுடனும், தயவோடும் செய்து தருகிறது.

பூரண விவரங்களுக்குத் தலைமை ஆபீஸிற்கோ, அல்லது நாட்டின் பல பாகங்களிலும் உள்ள எங்கள் கம்பெனிப் பிரதிநிதிகளுக்கோ எழுதித் தாமதமின்றித் தெரிந்து கொள்ளலாம்.

யுனைடெட் இந்தியா அஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்,
செம்புதாஸ் தெரு, சென்னை.

எம். கே. ஸ்ரீனிவாசன்,
மானேஜிங் டைரெக்டர்.

Jaganmohini April (1935) Regd. No. M. 2210

போலி மருந்துகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள் !!!

# அமிர்தாஞ்சனம்

நாற்பது வருஷங்களுக்கு மேலாக முன்னணியில் நிற்கின்றது.




மற்றவைகள் இதைப் பின்பற்றித்தான் வருகின்றன.

லக்ஷக் கணக்கில் செலவாகின்றது

எல்லா இடங்களிலும் விற்கப்படும்.

## அமிர்தாஞ்சன் டிபோ,

சென்னை கல்கத்தா

பம்பாய்.